விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 04 திங்கட்கிழமை (21.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

## தனியார் பஸ் மோதி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்து, துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்.வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை யாக்கொப் (வயது 55) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-6)

## மாதம்பேயில் வெடிப்பு ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

மாதம்பேயில் நேற்றிரவு இடம்பெற்ற வெடிப்பு சம்பவமொன்றில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாதம்பே-சுதுவெல்லயிலுள்ள பழைய இரும்பு கடையிலேயே இந்தவெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.


அவ்விடத்தில் பழைய இரும்புகளை உருக்கும்தொழிற்சாலையும் இருப்பத 20-ம் பக்கம் பார்க்க

# பொதுநலவாய மாநாட்டில் வடக்கு முதலமைச்சர் உரை!

## ஆலோசித்து வருகிறது அரசு?

(கொழும்பு)

**கொழும்பில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் ஆலோசனை நடத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர்களது கூட்டத்திலேயே, இது தொடர்பில் ஆலோசனை செய்யப்பட்டுள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டின் பொருத்தமான நிகழ்வு ஒன்றில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை உரையாற்ற அல்லது ஒரு உரையை சமர்ப்பிக்க அழைப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகளையும், வட மாகாண சபைத தேர்தலை வெற்றிகரமாக நடத்தியுள்ளதையும் வெளிப்படுத்த முடியும் என ஆளும ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் இது தொடர்பான இறுதி முடிவுகள் எதுவும் எடுக்கப்பட்டதா 20-ம் பக்கம் பார்க்க

# மொழிக் கொள்கையை மீறினால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## அரச கரும மொழி ஆணைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச திணைக்களங்களில் மொழிக் கொள்கை மீறப்படுவது தொடர்பாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவரும் சட்டத்தரணியுமான நிமல் ரணவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கொஷி விருந்தினர் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச திணைக்களங்களில் மொழிக் கொள்கை மீறப்படுவது தொடர்பாக இராஜகிரியவில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு பொது மக்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு பொது மக்களால் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக எமது ஆணைக்குழுவினால் பல நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கபட்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழிகள் பயன்படுத்தப்படுவது இல்லை என்றும் இதனால் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனடிப்படையில் பொலிஸ் நிலையங் 20-ம் பக்கம் பார்க்க

### காணாமல் போனோர் விபரம் திரட்டல்

## மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்க பிரஜைகள் குழு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக கடந்த மாதம் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்கு விபரங்களை வழங்கி உதவும் வகையில் மன்னார் பிரஜைகள் குழுவினர் வடமாகாணத்தில் தகவல்களைத் திரட்டி வருகின்றனர்.

காணாமல்போனவர்கள் தொடரபில் ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக்குழு பற்றி பொதுமக்கள் கவனமில்லாமல் இருந்து விடக்கூடும். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிடக் கூடும் என்பதற்காகவே தாங்கள் பொதுமக்களிடமிருந்து இந்தத் தகவல்களைத் திரட்டி ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் தேவசகாயம் புலேந்திரன் சிந்தாத்துரை தெரிவித்தார்.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் முதல் தொகுதியாகத் திரட்டப்பட்டுள்ள தகவல்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதுடன் மேலும் கால அவகாசம் கேட்டுப் பெற்று தற்போது இந்த சந்தர்ப்பத்தைத் தவற [illegible] 20-ம் பக்கம் பார்க்க

# சீரற்ற காலநிலையால் 2 ஆயிரம் பேர் பதிப்பு

### ஒருவர் பலியானார்

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற கால நிலையினால் ஒருவர் பலியானதுடன் 2ஆயிரத்து 32 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

காலி, களுத்துறை, கொழும்பு, அம்பாறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் 425 குடும்பங்களைச்சேர்ந்த 2ஆயிரத்து 32 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 64 வீடுகள் முழுமையாகவும் 389 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைநதுள்ளது என்றும் அந்த நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல் நேற்றுவரையே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள் 20-ம் பக்கம் பார்க்க

# கொழும்பு குடியிருப்பாளர் விபரம் திரட்டுகிறது மர்மக்கும்பல்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள், முஸ்லிம்கள் அதிகளவில் வசிக்கும் கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் அடையாளம் தெரியாத குழுவினரால் குடியிருப்பாளர்களின் தனிப்பட்ட விபரங்களைக் கோரும் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்தப் படிவத்தில் முழுப்பெயர், முகவரி, தேசிய இனம், தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம், தொலைபேசி இலக்கம், தொழில் முகவரி, பணிசெய்யும் காலம் உள்ளிட்ட பல விபரங்கள் கோரப்பட்டுள்ளன. போர் நடந்த காலங்களில் கொழும்பில் வசிக்கும் தமிழர்கள், இது போன்று அடிக்கடி படிவங்களை நிரப்பி ஒப்படைக்க வேண்டியிருந்தது.

இராணுவ பொலிஸார், பொலிஸார், விமானப்படை, கடற்படைப் புலனாய்வுப் பிரிவுகள் தனித்தனியாக இத்தகைய படிவங்கள் மூலம் விபரங்களை சேகரித்திருந்தன. எனினும் தற்போது அத்தகைய பதிவுமுறை இல்லாத சூழலில் அடையாளம் தெரியாத நபர்களால் 20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரன் அமைத்த வீடுகளில் பாரிய இராணுவ முகாம் அமைப்பு

யாழ்.காக்கைத்தீவு, கல்லுண்டாய் வெளிப் பகுதியில் காலஞ் சென்ற அமைச்சர் மகேஸ்வரனால் அமைத்துக் கொடுக்கப்பட்ட மக்கள் குடியிருப்பினை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் அங்கு பாரிய இராணுவ முகாமினை அமைத்து வருகின்றனர்.

மேற்படி பகுதியில் இருந்த ஒரு குடும்பத்தினையும் அங்கிருந்து வெளியேற்றிவிட்டு முழு வீச்சில் இராணுவ முகாம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மகேஸ்வரன் இந்து கலாசார அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

. இந்நிலையில் கடந்த 2002 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் சொந்த வீடுகள், காணிகள் இல்லாதவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு யாழ். காக்கைதீவு - கல்லுண்டாய் வெளிப் பகுதியில் வீட்டுத்திட்டத்தினை அமைத்துக் கொடுத்திருந்தார்.

மேற்படி வீட்டுத்திட்டத்தில் சுமார் 25-ற்கும் மேலாக கல் வீடுகள் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது. காலப் போக்கில் குடிநீர்ப் பிரச்சினை காரணமாகவும், நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகவும் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

இறுதி யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் மேற்படி வீடுகளில் இரண்டு குடும்பங்களைக் கொண்ட 14 பேர் வசித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அங்கு சென்ற இராணுவத்தினர் அங்கிருந்த குடும்பங்களிடம், குறித்த பகுதியில் புதிய இராணுவ முகாமினை அமைக்கப் போவதாகவும் இதனால் அங்கிருந்து வெளியேறுமாறும் கூறியுள்ளனர்.

இதனையடுத்து அங்கிருந்த ஒரு குடும்பத்தினர் வேறு இடத்திற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். மேலும் மற்றுமொரு குடும்பத்தினர் அங்குள்ள உடைந்த வீட்டில் தங்கியுள்ளனர்.

இதனையடுத்து அங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பனை ஓலையினால் காணி எல்லை வேலிகளை அடைத்து பாதுகாப்பினைப் பலப்படுத்தியுள்ளனர். (எ-8)

# யாழ். இந்துவின் ப.மா.ச நிர்வாகம் வாக்கெடுப்பு மூலம் தெரிவாகியது

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வதில் கடும் போட்டியேற்பட்டதால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இவ்வாக்கெடுப்பில் தலைவராக மருத்துவர் ஏ. தேவநேசன், செயலாளராக எஸ். கௌதமன் தெரிவு செய்யப்பட்டனர்.

இதுதவிர ஐந்து உப தலைவர்களும், உப செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர்.

உப தலைவர்களாக வைத்திய நிபுணர் பூ. லக்ஷ்மன், மருத்துவர் சிவபாதமூர்த்தி, மருத்துவர் திருக்குமரன், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மருத்துவர் சிறிகரன் உபசெயலாளராக, மருத்துவர் எஸ். நந்தகுமார், பொருளாளராக இ. குகானந்தன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (ந)

# சென்னையில் ரயில் மறியல்

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது என்று வலியுறுத்தி பெரியார் திராவிடர் கழகம், ஒருங்கிணைந்த அம்பேத்கர் இயக்கம் சார்பில் நேற்று சென்னையில் ரயில மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

காலை 10.30 மணிக்கு பெரியார் திராவிடர் கழக காஞ்சி மாவட்ட அமைப்பாளர்கண்ணதாசன்தலைமையில் பெண்கள் உள்பட 50 பேர் தாம்பரத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தண்டவாளத்தில் ரயிலை மறித்து நின்றபடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்களை தாம்பரம் பொலிசார் கைது செய்தனர். (எ-8)

# அதிபர்கள் கூட்டம் இன்று 10 மணிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேற்றைக் கொண்டிராத பாடசாலை அதிபர்களுடனான முக்கிய சந்திப்பு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் கல்வி வலய முகாமைத்து மண்டபத்தில் இடம் பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

ஏற்கெனவே இச்சந்திப்பு இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாதகாரணத்தால், இன்று காலை 10 மணிக்கு இச் சந்திப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# விஷ ஊசி ஏற்றிக் கொண்டு காதல் ஜோடி தற்கொலை

காதலனும் காதலியும் தமக்குத் தாமே விஷ ஊசி ஏற்றி தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் வெள்ளவாய பிரதான பாதையின் காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வெள்ளவாய பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, விரைந்த பொலிஸார் நேற்று பிற்பகல் மேற்படி இருவரது சடலங்களை மீட்டனர்.

அத்துடன் விஷக் குப்பியொன்றும் ஊசியொன்றையும், அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணமொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மருத்துவமனையில் சேவையாற்றும் தாதி ஒருவரும் கடற்படையில் கடமையாற்றும் கடற்படை வீரர் ஒருவருமே தற்கொலை செய்துகொண்டவர்களென்று ஆரம்ப விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

தற்கொலை செய்து கொண்ட தாதி சூரியகமை என்ற இடத்தையும் கடற்படை வீரர் பதுளை வாசனாகம என்ற இடத்தையும் சேர்ந்தவர் ஆவர்.

இவ்விருவரும் தத்தமது வீட்டாருக்கு தாம் தற்கொலை செய்து கொள்வதாக கடிதங் களையும் அனுப்பியுள் ளனர். அதன் பிறகே விஷ மருந்துடனான ஊசியை ஏற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இவ் விருவருக்கும் ஏற்கெனவே திருமணம் முடித்து இரு குழந்தைகள் இருப்பதும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையிலேயே இருவரும் புறம்பாக காதல் வலையில் சிக்கியிருந்தனர்.

தற்கொலை செய்து கொண்ட தாதி தனது கணவனுக்கும் தற்கொலை செய்து கொண்ட கடற் படை வீரர் தனது மனைவிக்கும், இரு குழந்தைகளுக்கும் தனித் தனியாக கடிதங்களை தபாலில் சேர்த்துவிட்டே இவ்விருவரும் விஷ ஊசி ஏற்றி தற்கொலை செய்து கொண்டுள்ளனர். (எ-8)





**திருவாளர் சுப்பிரமணியம் சிவசூரியா**

(MBA (Read), PGDM, Dip. in Counseling)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த எமது நண்பன் திரு. சுப்பிரமணியம் சிவசூரியா அவர்கள் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளமையை பெருமையுடன் வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் மக்கள் சேவையுடன் வாழ்வில் உயர உளமார வாழ்த்துகின்றோம்.

(C-2227) வாழ்த்துவோர் : பல்கலைக்கழக நண்பர்கள்.



## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம் இல. 144, பிறவுண் வீதியில் சமூக சேவை அமைப்பாக இயங்கும் கல்யாண மாலை அமைப்பில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உண்டு.

✦ **முகாமைத்துவ உதவியாளர் (இருபாலாரும்)**

✦ **கணனி உத்தியோகத்தர்கள் (பெண்கள்)**

குறிப்பு :

I முகாமைத்துவ உதவியாளர்கள் 40 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், உயர்தரத்தில் சித்தியும் இருத்தல் அவசியம். அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை.

II கணனி உத்தியோகத்தர்கள்; தமிழில் ரைப்பிங் உட்பட இ-மெயில், இணையம் ஆகியவற்றில் பரீட்சயமும் இருத்தல் அவசியம்.

III யாழ். நகரை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை. தகைமை உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய சுயவிபரத்தை

**கல்யாண மாலை** விளம்பர இலக்கம் : சி-5238

மே/பா வலம்புரி, இல. 3, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி-5238) பணிப்பாளர் சபை, கல்யாணமாலை.



## மரண அறிவித்தல்



மலர்வு 28-07-1930 உதிர்வு 19-10-2013

**கதிரேசு மார்க்கண்டு**

Woodland Company, Woodland Hotel
(ஸ்தாபகர்) Colombo -11

புங்குடுதீவு 10-ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு மார்க்கண்டு அவர்கள் 19.10.2013 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கதிரேசு, வள்ளியம்மையின் அருமை புதல்வரும் காலஞ்சென்ற சின்னத்துரை, அன்னம்மாவின் அருமை மருமகனும் புஸ்பவதி (Australia), லிங்கநாதன் (Woodland), புஸ்பரஜனி (Australia), புஸ்பலதா (Colombo), புஸ்பசாந்தினி (Canada), ஜெகநாதன் (Woodland) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. பிரபாகரன் (Australia), கிருபா, சஞ்ஜீவன் (Australia), Dr. சோமாஸ் கந்தராசா (Colombo), வாகீசன் (Canada), தர்ஷினி (Colombo) ஆகியோரின் அருமை மாமாவும். காலஞ் சென்றவர்களான முத்துவேலு, செல்லமுத்து, தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலம் மற்றும் ஆறுமுகம் (Canada) ஆகியோரின் அருமைச் சகோதரனும்,

காலஞ் சென்ற ஆச்சிக்குட்டி, சுந்தரம்பிள்ளை மற்றும் கிருஷ்ணாம்பாள் (Canada), மனோன்மணி (Colombo) , தேவரசி (Canada) சரஸ்வதி (Canada), திலகவதி (Canada), Dr. வசந்தகுமார் (U.S.A), தெய்வகுமார் (Canada) ஆகியோரின் அருமைச் மைத்துனரும் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை, வேல்சாமி மற்றும் மகாலட்சுமி, ஸ்ரீகௌரி ஆகியோரின் அருமை சகலனும்

ரெஜிகன், அருண், டயான், சகிஷ்ணா, ரகிஷ்ணா, கோவிந்த், திவ்வியா, ஹரிஷ்மன், தனுஷா, அனோஜ்மன், புருஷோத்தனன், யஷ்வினி, ஜஸ்மின், ஆஷா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை (23.10.2013) அன்று காலை 8 மணியளவில் அன்னாரது வீட்டில் நடைபெற்று காலை 10 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

9/4, Station Road, Colombo - 04
T. P : 2584519 (C-5235)

தகவல் :
மா. லிங்கநாதன் (மகன்)



## COMPUTER AND ACCESSORES SALES, 30% OFFER

யாழ் நகரில் 7வருடமாக இயங்கி வரும் North Lead கணனி நிறுவனமானது தனது முதலாவது கிளை காரியாலயத்தை இல.12, கனகபுரம் வீதி, கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பித்ததை முன்னிட்டு அனைத்து கணனி உதிரிப்பாகங்களுக்கும் 30% விசேட விலைக்கழிவை வழங்கியுள்ளது (This offer only 15 days). எமது தலைமைக் காரியாலயத்தில் கொள்வனவு செய்த கணனிகளினதும், அதன் உதிரிப்பாகங்களினதும் பழுதுகளையும், உத்தரவாதத்தினையும் எமது கிளைக் காரியாலயத்திலே நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| 8GB Pendrive: 1150 | Intel Mother Board: 8250 | ATX Casing Tower: 2650 | Orignal Toner: 4550 |
| 16GB Pendirve: 1680 | Intel Processor 3.0 GHz: 8600 | 2GB DDR III Ram: 3150 | Laptop Battery: 8850 |
| 7.2 Multy Dongle: 2950 | Intel I-3 Processr 3.3GHz:16850 | Techfine 650W UPS : 4350 | Laptop Screen: 12850 |
| 20MP Webcam from: 775 | 500 GB Toshiba HDD: 7650 | Samsung DVD Writer: 2750 | Lap Org Charger: 1950 |
| Head Phone & Mic: 250 | 500 GB Westrn Dig HDD: 7850 | 3in1 Sams Laser Printer:23750 | Lap Multy Charger:1250 |
| Laser Mouse from: 250 | 1TB Westrn Digital HDD: 10850 | Tablet PC With Antroid: 23500 | Contact : |
| Keyboard from: 480 | 19" Samsung Led Monitor:12700 | P-4 3rd Gen Full Set: 48850 | Tel: 021-222 4459 |
| Wirless Key&Mouse:1850 | 19" HP Led Monitor: 12650 | 3rd Gen Laptop from: 54850 | Fax: 021-222 4460 |
| Lap Coolar Pad from: 850 | 19" AOC Led Monitor: 12600 | 3rd Gen I-3 HP Laptop: 64000 | Mob: 0772533390 |

அனைத்து வகையான கணனிகளையும் (Laptop, Desktop) உடனுக்குடன் உத்தரவாதத்துடன் பழுது பார்த்து கொடுக்கப்படும். (வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு)

**NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER**

Head Office: No: 328 Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Branch: No:12 Kanagapuram Road, Kilinochi. (பாரதி ஹோட்டலுக்கு அருகில்)
(C-5236)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கலைவாணர்

ஒரு தடவை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் பேராசிரியர் "கல்கி"யை சந்தித்து பேசிக்கொண்டிருந்தார்.

கலைவாணர், கல்கியைப் பார்த்து,

"எனக்கு கதை எழுத ஆசையாக இருக்கிறது. எப்படி எழுதுவது?" என்று கேட்டாராம்.

"கதை எழுதுவதற்கு நாலு மை வேணும் "என்றாராம் கல்கி.

"அப்படியா? அப்படியானால் என்ன என்ன கலர் மை வேணும்?" என்று கேட்டார் கலைவாணர் சிரித்துக் கொண்டே.

"நான் சொன்னது கலர் மை இல்லை. அது வேறு மை. அதாவது ஒன்று திறமை, இரண்டு பேனா மை, மூன்று தனிமை, நாலு பொறுமை" என்றார்.

உடனே கலைவாணர், "உங்கள் யோசனை அருமை!" என்றாராம். அதுதான் கலைவாணர்.

பொதுவாக எழுத்தாளர்கள் எழுதுவது போல் நடந்து கொள்வதில்லை. ஆனால் கலைவாணர் என்ன சொல்வாரோ அதேபோல் நடப்பார்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும் என்ற கருத்தை சினிமா படங்களில் வலியுறுத்துவார். அதே மாதிரி நடைமுறை வாழ்க்கையிலும் எல்லோருக்கும் எல்லாமும் கொடுப்பார்.

பணம் – பதவி – புகழ் எதுவுமே இல்லாத ஒரு சாதாரண மனிதனாக இருந்தால் கூட இவர் கொடுக்கும் மரியாதைக்கு கொஞ்சமும் குறையிருக்காது. இந்தக் குணம் சாதாரணமாக எல்லோருக்கும் இருப்பதில்லை.

அவர் தியேட்டருக்குப் போய் படம் பார்க்கிறார் என்று தெரிந்ததும் வெளியில் பிச்சைக்காரர்கள் வந்து கூடி விடுவார்கள். இது அவருக்குத் தெரியும். வெளியில் நம்மை நம்பி ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருக்குமே என்று நினைத்து ஒரு நூறு ரூபாவை எடுத்து சில்லறையாக மாற்றிவரச் சொல்லுவார்.

படம் முடிந்து வெளியில் வரும்போது நலம் விசாரித்துக் கொண்டே அதை சமமாக பிரித்து கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்படுவார்.

ஒருநாள் அப்படி புறப்படும் போது ஒரு சின்னப் பையனுக்கு சில்லறை எதுவும் கிடைக்கவில்லை. இது கலைவாணருக்குத் தெரியாது. காரில் ஏறி புறப்பட்டு விட்டார்.

அந்தப் பையன் காருக்கும் பின்னால் "ஐயா... நீங்களே இல்லையென்று சொன்னால் நான் என்ன பண்ணுவேன். இன்றைக்கு பட்டினிதான்" என்று கத்திக்கொண்டே ஓடி வந்தான்.

கலைவாணர் இதைக் கவனித்து விட்டார். உடனே காரை நிறுத்தச் சொல்லி இறங்கி அந்தப் பையனை கட்டிப் பிடித்து, "நான் கவனிக்காமல் வந்து விட்டேன். என்னை மன்னித்து விடப்பா" என்று சொல்லி அழ ஆரம்பித்தார்.

இன்னொரு தடவை இதே மாதிரி ஒரு தியேட்டரிலிருந்து வெளியே வந்திருக்கிறார். ஒரு ஆள் இவரிடம் வந்து நின்றிருக்கிறார். கொடுப்பதற்கு பணம் இருக்கவில்லை.

உடனே வீட்டுக்குக் போய் சில்லறை எடுத்து அவரது அடையாளங்களை சொல்லி அந்தக் காசை கார் டிரைவரிடம் கொடுத்தனுப்பினார்.

பிச்சை போடுவதற்காக காரை அனுப்பியதாக யாரையாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர்தான் என்.எஸ்.கிருஷ்ணன் – வித்தியாசமான மனிதர் – வித்தியாசமான கலைஞர்.

கலைவாணரின் சகோதரரின் திருமணம் நடந்தது. அதில் தியாகராஜ பாகவதரின் கச்சேரி. கச்சேரி முடிந்தவுடன் கலைஞர்களுக்கெல்லாம் கலைவாணர் பரிசு வழங்கினார்.

அந்தக் கச்சேரியில் கடம் வாசித்தவருக்கு மட்டும் மற்ற எல்லோருக்கும் கொடுத்ததை விட பெரிய வெள்ளிக் கோப்பையை பரிசாகக் கொடுத்தார்.

எல்லோரையும் விட கடம் வாசித்தவருக்கு மட்டும் ஏன் பெரிய பரிசு கொடுத்தீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு கலைவாணர் விளக்கம் கொடுத்தார்.

"இப்பொழுதெல்லாம் ரயிலில் கூட்டம் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த வித்துவான் இவ்வளவு பெரிய மண்பானையை உடையாமல் மிகவும் பத்திரமாக கொண்டு வந்திருக்கிறாரே. இது என்ன சாதாரண காரியமா? அவருடைய சாமர்த்தியத்தைப் பாராட்டுவதற்குத் தான் அவருக்கு இவ்வளவு பெரிய பரிசு" என்றாராம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வடக்கின் அபிவிருத்திக்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்

## வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்பதன் மூலமே வடக்கினை அபிவிருத்தி செய்ய முடியும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கலாநிதி சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வலி. தென் மேற்கு பிரதேச சபை தலைமைக் காரியாலய திறப்பு விழா கடந்த 18 ஆம் திகதி சுழிபுரம் வடக்கம்பரையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாகாண சபையில் அங்கம் வகிக்கும் 4 அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் வடக்கு மக்களின் முழு அபிவிருத்திக்காக பாடுபடல் வேண்டும்.

இதனைவிட வடக்கிலுள்ள உள்ளூராட்சித் திணைக்களங்கள் சுகாதார அமைச்சரோடு இணைந்து செயற் பட வேண்டிய தேவையுள்ளது.

டெங்கு நோய்த்தாக்கம் வடக்கிலும் காணப்படுகின்றது. இதனை சுகாதார அமைச்சு மட்டும் கட்டுப் படுத்திவிட முடியாது.

உள்ளூராட்சி திணைக் களங்கள் சரியான முறை யில் இயங்காத இடங்க ளில் டெங்கு நோய்த்தாக்கம் அதிக ரித்து காணப்படுவதோடு, இவ் விடங்க ளில் டெங்கு நோயினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே உள்ளூராட்சித் திணைக்களமும் சுகாதார அமைச்சும் இணைந்து செயற்படுவதன் மூலமே டெங்கு நோயை வடக்கில் முழு மையாக கட்டுப்படுத்த முடியும்.

மாகாண சபையில் உள்ள அமைச்சர்கள், உறுப்பினர்கள் எந்தவொரு ஊழலு மின்றி வினைத்திறனுடன் செயற்படும் போது தான் மக்களின் சுபீட்சத்திற்காக உழைக்க முடியும் என்றார். (அ-4)

# காணாமற்போனோர் குறித்த விபரங்களை சமர்ப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோர் தொடர்பான விபரங்கள் திரட்டும் நடவடிக்கை நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ள போதிலும் எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான து.ரவிகரன் தெரிவித்தார்.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 14 ஆம் திகதி முதல் நேற்று வரை வடக்கில் இடம் பெற்றுவந்த காணாமற் போனவர்களின் விபரங்கள் திரட்டும் நடவடிக்கையானது நேற்றுடன் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

இந்த விபரங்கள் திரட்டும் நடவடிக்கை நேற்றுடன் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட போதிலும் காணாமற் போனவர்களின் விபரங்களைச் சமர்ப்பிக்க தவறியவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தால் அதனை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 100-120 | 120 |
| பச்சைமிளகாய் | 90 | 90 | 120 |
| தக்காளி | 110 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 50 |
| கோவா | 50 | 80 | 60 |
| கரட் | 40 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 50 |
| புடோல் | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 170 | 160-180 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 70 |
| பயற்றங்காய் | 100 | 110 | 120 |
| லீக்ஸ் | 100 | 140 | 100 |
| பீற்றூட் | 10 | 15 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 110 | 140 |
| போஞ்சி | 100 | 140 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 30 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | – | – | – |

# இராசி பலன்

21.10.2013
(ஐப்பசி 04, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துதியை காலை 6.18 மணிவரை
கார்த்திகை முழுவதும்
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
கார்த்திகை விரதம்

**மேடம்** காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** ஆறுமுகப் பெருமான் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பெயரும் புகழும் கூடும்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழில் முன்னேற்றமுண்டு, உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், அந்நியர் உதவியுண்டு, தூரதேசச் செய்திகள் வந்துசேரலாம்.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், மறைமுக எதிர்ப்புகள் முடிவுக்கு வரும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள், செலவுகள் அதிகமாகும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடன் பிறப்புகள் உதவி செய்ய முன்வரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**தனுசு** கடன் சுமை குறைய நடவடிக்கை எடுப்பீர்கள், உடல் நலன் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்** புண்ணிய காரியங்களில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கலாம், செய்தொழிலில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களை காணலாம், பயணங்களால் நன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

வளவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு-கட்டுநாயக்க அதிவேகப் பாதை

**27-ம் திகதி திறப்பு**








இலங்கையின் வர்த்தக நகரமான கொழும்புக்கும் பண்டாரநாயக்க விமான நிலையத்துக்கும் இடையே இலகு பயணத்தைக் குறைந்த நேரத்தில் மேற்கொள்ளக்கூடிய கடுகதிப் பாதையொன்றை (Expressway) அமைக்க வேண்டும் எதிர்பார்ப்பு நீண்டகாலமாக இருந்தது. அதன்படி கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்தை இணைக்கும் 25.8 கிலோமீற்றர் நீளமான நவீன பாதை அமைக்கப்பட்டுவிட்டது. இலங்கை அமைத்துள்ள இரண்டாவது கடுகதிப் பாதை இதுவாகும்.

1968இல் இப்பாதைக்கான செயல்திட்டம் உருவாக்கப்பட்டது. நீண்டகால தொடர் முயற்சியின் பயனாக எதிர்வரும் ஒக்டோபர் 27ஆம் திகதி இப்பாதை திறந்து வைக்கப்பட இருக்கின்றது.

இந்த அதிவேக நெடுஞ்சாலை ஊடாக பயணிக்கும் வாகனங்கள் கொழும்பில் இருந்து கட்டுநாயக்கவை 20 நிமிடங்களில் இலகுவாக சென்றடைய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக 350 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது.

இதில் பயணிப்போரில் பெரும்பாலானவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு செல்பவர்களாகவே இருப்பார்கள்.

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கு வரும் உலகத் தலைவர்களை வரவேற்று குறுகிய நேரத்தில் கொழும்புக்கு அழைத்து வர இப்பாதை பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1968இல் உருவாக்கப்பட்ட கருத்திட்டம் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து. இவ்வாறு கொழும்பு - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையப் போக்குவரத்தை நீர்கொழும்பு ஏ-3 வீதியூடாக அமைக்க 1981-1991களில் கரு மாற்றியது. எனினும் இது நடைமுறைக்கு வரவில்லை.

இறுதியாக 1995இல் ஓகஸ்ட் மாதம் கொழும்பு - சர்வதேச விமான நிலையத்துக் கிடையிலான கடுகதிப் பயணத்துக்குரிய தனியான பாதை அமைப்பு இலங்கை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. தேவையான நிதிக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதைக்குரிய இடம் அடையாளப்படுத்தப்பட்டபோது அது முத்துராஜவெல சதுப்பு நிலம், நீர்கொழும்பு கடல்நீர் ஏரியை உள்ளடக்கியதாக அமைந்தது.

2000ஆம் ஆண்டில் கொரியக் கொம்பனி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. செயல்திட்ட வேலைகளின் ஒரு பகுதி செய்து முடித்த நிலையில் பெருமளவு நிதித் தேவை காரணமாக ஒப்பந்த வேலை கைவிடப்பட்டது. 12 பில்லியன் ரூபா இத்திட்ட வேலைக்காகத் தேவைப்பட்டது.

முதல் முயற்சி கைவிடப்பட்ட நிலையில் 2006ஆம் ஆண்டில் சீன வங்கி ஒன்றின் நிதியில் பாதை வேலையை ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகரித்தது.

20 வருடக் கடனில் நிதி பெறவும் 292.4 மில்லியன் டொலர் செலவாகுமெனவும் மதிப்பிடப்பட்டது. சீனாவின் மெற்றலொஜிகள் குறூப் கம்பனிக்கு வேலைக்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. செயல்திட்ட ஒப்பந்தம் 2008இல் கைச்சாத்திடப்பட்டபோது 2009 ஓகஸ்டில தொடங்கி 3 ஆண்டுகளில் முடிக்கக் கூடியதாக இவ்வேலை ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் தென் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கடுகதிப்பாதையிலும் பார்க்க வித்தியாசமான பல நவீன அம்சங்கள் இப்பாதையில் அமைக்கப்பட்டுள்ளன. பர்தை ஓரத்திலும் நடுப்பகுதியிலும் இயற்கை எழில் நிறைந்த மலர்கள் கண்ணுக்கு விருந்தும் மனதுக்கு இனிமையும் தருகின்றன. வேறுபட்ட செய்திகளைப் பரிவர்த்தனை செய்யும் நவீன வசதிகள் புகுத்தப்பட்டுள்ளன. தெற்கில் அமைக்கப்பட்ட கடுகதிப்பாதையில் உள்ளதைவிட வித்தியாசமானதும் இலத்தி ரனியல் பொறிமுறையில் அமைந்ததுமான பயணச் சீட்டை வழங்கும் முறை கருமத்தைச் சுலபமாக்குகிறது. பிரதான கட்டுப்பாட்டு நிலையம் சீதுவையில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்தே CCTV கமெரா மூலமாக கடுகதிப்பாதையில் நடைபெறும் விடயங்களையும் ஏனைய விடயங்களையும் அவதானிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சீதுவைக் கட்டுப்பாட்டு நிலையம், தீயணைக்கும் படை, பொலிஸ் நிலையம் போன்றவற்றை CCTV கமெரா மூலம் நெறிப்படுத்தும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்படும் கொழும்பு-கட்டுநாயக்க கடுகதிப் பாதையால் தினமும் 10 ஆயிரம முதல் 15 ஆயிரம் வரையான வாகனங்கள் பயணம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## பங்குப் பரிவர்த்தனையை மாற்றியமைக்க நடவடிக்கை

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் தற்போதைய கட்டமைப்பை இல்லாமல் செய்து, பங்குதாரர்கள் உரிமையாண்மையை கொண்ட கம்பனியாக கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் ஒரு வருட காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின தலைவர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

தற்போது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது நம்பிக்கை அடிப்படையில் இயங்கும் தாபனமாக அமைந்துள்ளதுடன், முழுமையாக பங்குமுகவர்களின் உரிமையாண்மையை கொண்டுள்ளது.

மறுசீராக்கம் செய்யப்படுவதன் மூலம் பங்குப்பரிவர்த்தனையை இலாப நோக்குடைய பங்குதாரர்களின உரிமையாண்மையை கொண்ட நிறுவனமாக அமையவுள்ளது.

### வரிச்சலுகை நீடிக்கப்படலாம்

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் புதிதாக பட்டியலிடப்படும் நிறுவனங்களுக்கான வரிச்சலுகை தொடர்ந்தும் நீடிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் பெருமளவில காணப்படுவதாகவும், கடந்த ஆண்டு வரவு செலவுத்திட்ட பிரேரணையில் இந்த ஆண்டில் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்படும் நிறுவனங்களுக்கு 3 ஆண்டு காலப்பகுதிக்கு வரிச்சலுகை வழங்கப்படுமென அரசு அறிவித்திருந்தது. இந்த நிலைப்பாட்டை தொடர்ந்து நீடிக்குமாறு கோரிய மனுவொன்று திறைசேரியிடம் கோரியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நாலக கொடஹேவா மேலும் தெரிவித்தார்.

### ப.சந்தையில் புதிய பலகை

வெளிநாட்டு முதலீடுகளுடன் ஆரம்பிக்கப்படும் நிறுவனங்களை பட்டியலிடவென புதிதாக பலகையொன்றை கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் அமைப்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும்

இலங்கை முதலீட்டு சபையின் அனுமதியுடன் தாபிக்கப்படவுள்ள கம்பனிகளுக்கென புதிய பலகை ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுத் தலைவர்தெரிவித்தார்.

## வட்டி விகிதாசார கொள்கைகளை மேலும் தளர்த்த நடவடிக்கை

வங்கி வட்டி விகிதாசாரத்தை தீர்மானிக்கும் வட்டி விகிதாசார கொள்கைகளை மேலும் தளர்த்துவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் மீள் கொள்வனவு வீதம் 6.5 சதவீதத்திலும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் 8 .5 சத வீதத்திலும் பேணப்படவுடள்ளன


அபிவிருத்தி பணிகளுக்கான கடன் அளவை அதிகரிக்கும் நோக்கத்திற்காக கடந்த நாட்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை மத்திய வங்கி நிதி கொள்கைகளை தளர்த்த நடவடிக்கை எடுத்தது.

பணவீக்கம் குறைந்துள்ள நிலையில் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரிப்பதற்காகவே வட்டி விகிதாசார கொள்கைகளை தளர்த்த நடவடிக்கை எடுத்ததாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பில் நடைப்பெற்ற கொள்கை கற்கை நிலையத்தின் வருடாந்த சம்மேளனத்தில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தற்போது எதிர் கொண்டுள்ள சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

## தேசிய தர விருதை வென்றது சியெட்

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் இந்தியாவின் RPG குழுமத்துக்கும் களனி டயர் நிறுவனத்துக்கும் இடையிலான ஒரு வெற்றிகரமான கூட்டுமுயற்சியாகும்.



இலங்கையின் முன்னணி டயர் உற்பத்தி நிறுவனமான சியெட களனி ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு 2013-ம ஆண்டின் இலங்கை தரப்படுத்தல் நிலையத்தின் (SLSI) தேசிய தர விருது வழங்கும் விழாவில் பெரிய அளவிலான உற்பத்திப் பிரிவில் தேசிய தர விருது கிடைத்துள்ளது.

இந்த பிரம்மாண்டமான விழா ஒக்டோபர் மாதம் 14-ம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. சியெட் களனி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராமன் ராஜகோபாலன் இந்த விருதைப் பெற்றுக் கொண்டார்.

தற்போது இந்தியாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சியெட் உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் நிலை கொண்டுள்ள ஒரு வர்த்தக முத்திரையாகும். 2010, 2011 மற்றும் 2012 -ம் ஆண்டுகளில் சிறந்த வர்த்தக செயற்பாட்டுக்காக தேசிய விருதை வென்றுள்ள

## ஆடைத்துறையில் சீன முதலீடு

இலங்கையின் ஆடை மற்றும் பின்னல் தொழிற்துறை அபிவிருத்திக்கு சீனா தொடர்ந்தும் உதவியளிக்கும் என்று சீனாவின் வர்த்தக துறை அமைச்சின் பிரதிநிதி யு ஜியான் ஹுவா தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனா இலங்கையின் ஆடை உற்பத்திகள் மற்றும் பின்னல் வேலைப்பாடுகளுக்கு சர்வதேச சந்தை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் வகையில், முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்என்றும்அவர்தெரிவித்துள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,947.42 | 5,976.51 |
| எஸ் & பி 20 சுட்டி | 3,283.62 | 3309 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 3,288.417

[illegible] கல்மசு(1,187.50),சுவதேசி(19,000.00),செரண்டிப் லாண்ட் (1,462.10),பேருவளை வோல்கின்(99.80),லேக் ஹவுஸ் பிறிண்ட்(106.50).

[illegible] எஸ்.எம்.பி. லீசிங்( 0.30),ஜி எஸ். பினான்ஸ்(380.10), என்வெயர் றிசோர்சஸ்( 0.40),லீ ஹெட்ஸ்( 270.00),லங்கா செரமிக்( 102.40).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)


| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.43 | 132.66 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.09 | 212.61 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.19 | 180.46 |
| சுவிஸ் பிராங் | 140.84 | 146.41 |
| கனேடிய டொலர் | 124.65 | 129.29 |
| அவுஸ்திரேலிய டொலர் | 122.55 | 127.52 |
| சிங்கப்பூர் டொலர் | 103.51 | 107.22 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.65 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பொலிஸ் பிரிவில் பணமோசடி அதிகரித்துள்ளது

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ



(யாழ்ப்பாணம்)

**கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பாரிய கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் பண மோசடிச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக் கொடி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பணமோசடி சம்பந்தமான முறைப்பாடுகள் தான் அதிகம் கிடைக்கப் பெறுகின்றன.

அவற்றுள் கடனாகப் பணத்தைப் பெற்று ஏமாற்றுவது, சீட்டு பிடித்து ஏமாற்றுவது போன்ற சம்பவங்களே அதிகமாக உள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என பலமுறை எச்சரிக்கை விடுத்திருந்தும் வட்டிப் பணத்தின் மீது கொண்ட மோகம் காரணமாக வட்டிக்கு பணம் கொடுப்பதனாலும் அதிகபணத்தை உடனடியாக பெற்றுக் கொள்ளும் ஆவலில் சீட்டு பிடிப்பதனாலும் அதிகளவானவர்கள் ஏமாந்து போகின்றனர்.

பின்னர் பொலிஸ் நிலையத்தில் வந்து முறைப்பாட்டை பதிவு செய்து பணத்தை மீட்டுத் தருமாறு கண்ணீர் விட்டு அழுகின்றனர்.

இதன் நடவடிக்கையாக நாம் ஏமாற்றிய நபர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தால் குறித்த நபர்கள் தலைமறைவாகி விடுகின்றமை தெரிய வருகின்றது.

தற்போது மக்களின் ஒத்துழைப்பும் போதிய விழிப்புணர்வும் இல்லாத காரணத்தால் பல திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

வீட்டில் நகைகளை வைத்துவிட்டு வெளியில் செல்வது ,தமது வீட்டுச் சாவிகளை அயலவர்களிடம் கொடுத்து விட்டு வெளியே செல்வது அல்லது வீட்டின் மறைவிடங்களில் வைத்து விட்டுச் செல்வது போன்ற நடவடிக்கைகளினாலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இதனைவிட முன்பின் தெரியாதவர்களை வீடுகளில் தங்க வைப்பது உள்ளிட்ட பல காரணங்கள் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற வாய்ப்பாகின்றன.

அத்துடன் சில பாடசாலைகளில் சரியான பாதுகாப்பு இன்றி பெறுமதியான இலத்திரனியல் சாதனங்களை வைத்து விட்டு செல்வது போன்ற காரணங்களாலும் திருட்டுக்கள் அதிகரிக்கின்றன.

பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுவதன் மூலமே இவ்வாறான திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

மேலும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை உரிய முறையில் கண்காணிக்க வேண்டும். அநாவசியமாக அறிமுகமற்ற, தேவையற்றவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த தமது பிள்ளைகளைப் பெற்றோர் அனுமதிக்கக் கூடாது.

மேலும் தவறான நடத்தை உடையவர்களின் தொடர்பால் இளைய தலைமுறையினர் சீரழிந்து வருவதையும் மதுபானப் போத்தல்களுடன் சமுதாயச் சீர்கேடுகளில் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிகின்றது. பொது இடங்களில் மதுபானங்களை அருந்திவிட்டு பொது மக்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் இளைஞர்கள் அசௌகரியங்களைஏற்படுத்திவருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்ட பலரை கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்தியுள்ளோம். இருப்பினும் இளைய தலைமுறையினர் தவறான பாதையில் செல்வதைத் தடுக்க பெற்றோர்களின் ஒத்துழைப்பு மிக் முக்கியமானது. பெற்றோர் கரிசனை எடுப்பின் கலாசார சீர்கேடுகளைத் தடுக்க முடியும்.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் குறிப்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மட்டுமே தற்போது மத குருமார்கள் மற்றும் சமாதான நீதவான்கள் ஊடாக குடும்பப் பிரச்சினைகளும் காணி, வேலிச் சண்டைகளும் சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டு வருகின்றன.

இவர்களால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு உடன்படாதவர்களே இணக்க சபைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரக அங்கிகள் திருட்டு

சுமார் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ளி மற்றும் பித்தளையிலான விக்கிரக அங்கிகள் திருட்டு சம்பந்தமாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள பிள்ளையார் கோவில் ஒன்றின் மூலஸ்தானத்திலிருந்த விக்கிரகத்திலிருந்தே மேற்படி அங்கிகள் திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை அல்லது நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றிருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்ததோடு, ஆலயத்தின் கூரையைப் பிரித்துக் கொண்டு உள்நுழைந்த திருடர்கள் விக்கிரக அங்கிகளைத் திருடிச் சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-6)

# அடுத்த வருடத்திற்குள் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும்

அடுத்த வருடத்துக்குள் நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் பெற்றுத்தர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கென புதிய மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் மற்றும் சம்பூர் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் மூலமாக சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய நியமனங்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளராக நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமும் பொருளாளராக மாகாணசபை உறுப்பினர் தயா கமகேயும் நியமிக்கப்படவுள்ளனர்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான முடிவுகளை எடுத்துள்ளார்.

ரணில்தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தியே இந்த நியமனங்களை மேற் கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியின் மீளமைப்புக்கு வழிவிடும் வகையில் தவிசாளர் பதவியில் இருந்து காமினி ஜெயவிக்கிரம பெரேராவும், பொருளாளர் பதவியில் இருந்து மற்றும் ஒருவரும் விலகியுள்ளனர்.

இந்தநிலையிலேயே புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை கட்சியினால் புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள தலைமைக் குழு தொடர்பில் விவாதிக்க ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் கரு ஜயசூரிய ஆகியோர் இந்த வாரத்தில் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர். (அ-2)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'6''<br>கி.பா: 22<br>தொழில்/ தகைமை: தனியார் கம்பனி (கனடா PR)<br>தொ. இல: B -879 | பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 1<br>உயரம்: 5'5''<br>கி.பா: 16.25, 4இல் செவ்.<br>தொழில்/ தகைமை: CIMA Part II<br>தொ. இல: G -897 |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>உயரம்: 5'2''<br>கி.பா: 77, 7 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: முகாமையாளர்<br>தொ. இல: B -881 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 3<br>உயரம்: 5'5''<br>கி.பா: 35, 4 இல் செவ்.<br>தகைமை: BA. பயிற்றப்பட்ட ஆரம்ப கல்வி ஆசிரியை (விவாகரத்தானவர்)<br>எ.பா: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ. இல: G -898 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 18.25<br>உயரம்: 5' 11''<br>தொழில்/ தகைமை: (O/L),விவாகரத்துப்பெற்ற பெண். நிரந்தரவதிவிடமுள்ள PR உள்ள பெண்(பிரான்ஸ்)<br>தொ. இல: B -882 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'2''<br>கி.பா.:29.75, 1இல் செவ்<br>தொழில்/ தகைமை: Technician (நோர்வே PR)<br>தொ. இல: G -899 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>உயரம்: 6'<br>கி.பா: 42, 2 இல் செவ்<br>தொழில்/ தகைமை: விவசாய டிப்ளோமா பட்டதாரி விவசாய போதனாசிரியர்<br>தொ. இல: B -883 | பிறப்பு: 1968 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5' 7''<br>கி.பா: 6.25<br>தொழில்/ தகைமை: BA. (பட்டதாரி ஆசிரியர்)<br>எ.பா: விவாகரத்து என்றாலும் ஏற்கப்படும் அரசதொழில்,வியாபாரம், தனியார் தொழில்<br>தொ. இல: G -902 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி வார செயற்பாடுகள்

(கரணவாய்)

தேசிய வாசிப்பு மாதம் மற்றும் உள்ளூராட்சி வாரம் என்பவற்றை முன்னிட்டு, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினரால் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி, மேற்படி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே கட்டுரை, கோலம் போடுதல், கவிதை ஆகியபோட்டிகள் இடம்பெறவுள்ளன.

உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் அடிப்படையில், இன்று திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை ஆதன வரி தொடர்பான நடமாடும் சேவை நவிண்டில் கலைமதி சனசமூக நிலையத்திலும் ஆயுள்வேத நடமாடும் சேவை கம்பர்மலை சனசமூக நிலையம், கவுந்தில் சனசமூக நிலையம், கோவிற்கடவை சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் நடைபெறவுள்ளதுடன், வியாபார உரிமத்தை இன்று வரை பெற்றுக் கொள்ளாதவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை ஆதன வரி நடமாடும் சேவை வல்வெட்டி மத்தி சனசமூக நிலையத்திலும் ஆதனவரி துவிச்சக்கர வண்டி உரிமம் பெறும் நடமாடும் சேவை நாமகள் மற்றும் கோவிற்கடவை சனசமூக நிலையங்களிலும் நடைபெறவுள்ளன.

அத்தோடு அன்றைய தினம் கப்புதூ, அந்தணத்திடல், கட்டைவேலி, கரம்பன் போன்ற இடங்களில் ஆதன வரி புதுப்பித்தலும் நடைபெறவுள்ளது. (அ-9-60)




# சுன்னாகம் சந்தியில் காணொளிதிரை; விபத்துக்களை ஏற்படுத்தும் அபாயம்


(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சந்தியில் அமைக்கப்பட்டுள் காணொளி திரை, சிறுவர்களின் கவனக் கலைப்பானாக காணப்படுவதால் குறித்த சந்தியில் விபத்துக்கள் இடம்பெறும் அபாய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சுன்னாகம் சந்தியில் அமைந்துள்ள மூன்றுதள தனியார் கட்டடத்தின் மேற்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள திரையில் இடம் பெறும் காட்சிகளை பார்த்த வண்ணம் சிறுவர்கள் குறித்த சந்தியை கடக்க முற்படுகின்றனர் என குறிப்பிடப்படுகிறது.

இதன் காரணமாக அவ்விடத்தில் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதுடன், தெய்வாதீனமாக சில விபத்துகளும் அண்மையில் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் அதிக வாகன போக்குவரத்து நெருக்கடியைக் கொண்ட காங்கேசன்துறை வீதியின் சுன்னாகம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள திரை அருகிலுள்ள வேறு இடங்களில் தாழ்வாக அமைக்கப்படுமாயின் இதனால் ஏற்படும் விபத்துக்களை குறைத்து கொள்ளமுடியும் என மக்கள் கூறுகின்றனர்.



எனவே இவ்விடயம் தொடர்பில் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள்வேண்டுகோள்விடுக்கின்றனர்.

இது தொடர்பில் வலி.தெற்கு பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு மக்களின் ஆதங்கத்தினை வெளிப்படுத்திய போது, இத்திரை அமைப்பதற்கான அனுமதி பிரதேச சபையினால் வழங்கப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

எனினும் இவ் விடயம் தொடர்பில் வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளருடன் தொடர்பு கொள்ளமுயன்ற போதும் அவருடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. (அ-5)

## சரசாலை நூலகத்தில் இன்று பேச்சு போட்டி

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட சரசாலை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான பேச்சுப் போட்டி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே, போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களை உரிய நேரத்திற்கு சமுகம் கொடுக்குமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-9-29)

# கடற் தாவரங்களை அகற்றும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட சாட்டி கடற்கரையில் ஒதுங்கியுள்ள கடற்தாவரங்களை அகற்றும் நடவடிக்கையில் வேலணை பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் முதல் அகற்றப்படாதிருந்த இக் கடற்தாவரங்களால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசியது.

இதனால் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

வேலணை பிரதேச சபையின் திடீர் நடவடிக்கையினை அடுத்து தற்போது சாட்டிக் கடற்கரை தூய்மையானதாகவும் துர்நாற்றம் அற்ற நிலையிலும் காணப்படுகின்றது.(அ-4)



# சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரிப்பு

## கட்டுப்படுத்தக் கோரிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணி முதல் போக்கறுப்பு வரையிலான கிராமங்களில் சட்ட விரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் கட்டுக்கடங்காத முறையில் அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளில் வெற்றிலைக் கேணி, நித்திய வெட்டை, கேவில் போக்கறுப்பு, வண்ணாங்குளம் ஆகிய கிராமங்களிலேயே இச் சட்டவிரோத உற்பத்தி அதிகரித்துள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் கீழ் உள்ள கேவில், ஆழியவளை, நித்தியவெட்டை ஆகிய கள் விற்பனை நிலையங்கள் மூன்று நான்கு மாதங்களாக மூடப்பட்டுள்ளன.

இப்பகுதியிலுள்ளவர்கள் கள்ளைத் தாமாகவே அந்தந்த மரங்களின் கீழும் வீதியோரங்களிலும் வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

இவற்றை விட, சில குறிப்பிட்ட கிராமங்களில் சட்ட விரோதமான கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் நடைபெற்று வருகின்றது.

இகன் காரணமாக இக்கிராமங்களிலுள்ளவர்கள் இலகுவான முறையில் மதுபானங்களைப் பெறக் கூடியதாகவுமுள்ளது.

இது தொடர்பில் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்திய போதிலும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, தொடர்ச்சியாக இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படின் கிராமங்கள் சீர்குலைவை சந்திக்க நேரிடும் என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-9-64)

# காலபோக செய்கைக்கான கடன் தொகை கிடைக்கவில்லை

(சாவகச்சேரி)

கல்வயல் விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கைக்கான கடன் தொகை பெறுவதற்காக விண்ணப்பித்த நிலையில், இது வரை கடன் தொகை எதுவும் கிடைக்க வில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி விவசாய சம்மேளனத்தினரின் ஊடாக சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் காலபோக நெற்செய்கைக்கான கடன் வழங்குவதாகக் கூறி, 50 விவசாயிகள் 500 ரூபாவை செலுத்தி விண்ணப்பித்திருந்தனர்.

இந்நிலையில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை குறித்த கடன் தொகை வழங்கப்படவில்லை.

எனவே, இக் கடன் தொகையை வழங்குவதற்கு உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-29)







மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வியஜதசமி நிகழ்வுகள் பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது. விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஏடு தொடக்கலினை மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் அருட்பிரகாச பிள்ளை நடத்திவைப்பதையும் மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெறுவதையும் நவராத்திரியை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும் படங்களின் காணலாம்.
(படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதெனியா பல் , கண் பரிசோதனை கூடம்





**PERADENIYA PROSTHETIC, ORTHODONTICS & OPTOMETRIST CENTRE**

**(Trained Prothetics & Orthodontics (Theory & Practical)**

**By Faculty Of Dental Sciences, University of Peradeniya**

**Specially Trained All Steps in Prosthetics)**








போதனா வைத்தியசாலைகளுக்கு மட்டுமே நியமனம் பெறும் பல் தொழில் வல்லுநர் (Paramedical) வரிசையில் ஸ்ரீலங்காப் பல்கலைக்கழகத்தில் உரிய பயிற்சிகளைப் பெற்று அதில் மூன்று மாதங்கள் பல்கட்டமைப்பு (Denture Setting) பற்றிய செய்முறை விளக்கத்தை பல் மருத்துவ மாணவர்களுக்கு வழங்கியதுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் 1992 முதல் 1996 வரை பல் கட்டல் செயற்பாடுகள் அனைத்தையும் (பல் கட்டல்,கிளிப் போடுதல்) மேற்கொண்டு, இன்று ஸ்ரீலங்காவிலுள்ள தேர்ச்சி பெற்ற ஏழு பல் வல்லுநர்களில் (Health Dept) ஒருவராய் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் தனித்து ஒரே ஒருவனாய் செயற்படுவதையிட்டு எல்லையற்ற பெருமிதத்துடன் வடக்கு, கிழக்கு மக்கள் மட்டுமல்ல புலம்பெயர் மக்களின் வரவேற்பின் மத்தியிலும்

## தனது 23 ஆவது அகவையைக் கொண்டாடுகின்றான்.

(4319)

- ✦ வழமை போல் வெளிநாட்டிலுள்ளோர் எம்முடன் தொடர்பு கொண்டு எமது வலையமைப்பு மூலம் இருந்த இடத்திலேயே பற்களைக் கட்டிக் கொள்ளலாம்.
- ✦ வன்னி, மன்னார், மட்டக்களப்பு போன்ற தூர இடங்களிலுள்ளோர் எம்முடன் தொடர்பு கொண்டு விட்டு வந்தால் ஒரே நாளில் உங்கள் தேவையனைத்தும் நிறைவேற்றப்படும். முழுப்பற்களையும் கட்டுவதாயினும் (Fullset) 5 மணித்தியாலயங்களில் உங்கள் தேவை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு சர்வதேச தரத்தினாலான பல் சமூகத்தையே அதிர வைத்த அதி உயர் தொழில் நுட்ப சேவை
- ✦ பல் அளவு எடுப்பதில் (Measurement) புதிய பரிணாமம்– தன்னியங்கு கருவி மூலம் எவரும் தமது பல் அளவை மிக நுட்பமாக எடுப்பதற்கான ஒழுங்கமைப்பு (Correct Impression) (Special Tray) பாவிப்பதால் சரியான பல் அளவு (Accurate Impression)
- ✦ 1996 முதல் இன்று வரை யாழ். போதனா வைத்தியசாலையில் பல்கட்டுதல், கிளிப்போடுதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறாமைக்கு பல்லின் கதாநாயகன் (பல்வல்லுநர்) இல்லாமையே காரணம் என்பது எம் மக்கள் எல்லோரும் அறிந்ததொன்றே.
- ✦ எமது சங்கம் (Society) உருவாக்கம் பெற்றுள்ளது. பல்வல்லுநர் சட்டப்படி எந்த பல்கட்டுதல் செயற்பாடு நடைபெறும் இடங்களிலும் பல்கலைக்கழக பயிற்சி பெற்ற வல்லுநர் மட்டுமே செயற்படமுடியும். வேறெவரையும் பல்கட்டுதல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தவோ, அவர்கள் மூலம் மாற்றிடத்தில் செய்திடவோ முடியாது.
- ✦ எம்மிடம் நேரில் வர இயலாதவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் உடன் ஆவனசெய்து உங்கள் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.

### எமது பற்சேவைகள்

- ✦ பல்கட்டுதல் (Prosthetic, Various Type)
- ✦ கிளிப்போடுதல் (Orthodontics)
- ✦ வாயால் சுவாசிப்பதால் ஏற்படும் பல் மிதப்பைத் தடுப்பதற்கான "Oral Screen"
- ✦ பல் கவரிடுதல்
- ✦ Rebasing
- ✦ Relining
- ✦ Post Crown
- ✦ All Type of Repairing
- ✦ Cleftpalet Appliences
- ✦ URA LRA Repairing (Labialbow,Adamsclasp)
- ✦ Gold Casting Silver பவுண் கட்டல்
- ✦ Feeding Appliences
- ✦ Implant, Bridge Metodot Dentures
- ✦ Extra Additional tooth





மற்றும் தேர்ச்சி பெற்ற கண் பரிசோதகரினால் (Dip in Optometry) கொம்பியூட்டரில் இலவச கண் பரிசோதனை பிரமாண்டமான காட்சியறை, எண்ணற்ற பிறேம்களின் சதுக்கம்!
அன்பான வரவேற்பு, பிரச்சினைக்கு உடனடித்தீர்வு, தரம், தராதரம், நிதானம் என்பவற்றுக்கு இலக்கணமானவன்

சங்குப் பற்களின் கதாநாயகன்

## பேராதெனியா

இந்நன்னாளிலிருந்து இம்மாதம் முடிவுறும் வரை (31.10.2013 வரை) எம்மக்களுக்கு அளப்பரிய சேவையை , எமது செயற்பாடுகள் அனைத்தையும் (பல்கட்டல், கிளிப்போடுதல், மூக்குக் கண்ணாடி பெறல்) மிக மிகக் குறைந்த கட்டணத்தில் (60%) முதல் வரும் ஆயிரம் பேருக்கு வழங்கவுள்ளோம் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்**

*Phone: 021 222 7655*

*E.mail:- Pera_Pros_ortho_Dent@gmail.com*



**Head:- 494, Hospital Road, Jaffna.**

**Branch: Ranjitha Medicals' Suthumalai**

**Residence: Moolai Road, Moolai.**

பேராதெனியா குழுமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நகரத்தின் அவல வாழ்க்கை


ஒரு அமைதியான சின்னஞ்சிறு கிராமத்தில் இரண்டு பூனைகள் மிக நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வந்தன. நாட்டுப்புறத்தில் வாழ்ந்த அந்தப் பூனைகளில் ஒன்று, நகர வாழ்க்கையை விரும்பி பிரிந்து சென்றுவிட்டது. சில மாதங்களுக்குப் பிறகு நகரத்திற்குப் போன பூனை தனது நண்பனான நாட்டுப்புறப் பூனையைப் பார்க்க வந்தது.

தனது நண்பனைக் கண்ட நாட்டுப் புறப் பூனை மிகுந்த மகிழ்ச்சியடைந்து வரவேற்று உபசரித்தது. தான் சேர்த்து வைத்திருந்த பழங்கள், பல வகைப் பண்டங்கள் முதலான உணவுகளைத் தனது நண்பனுக்கு அளித்தது. நகரத்துப் பூனை, நண்பனுடன் பேசி மகிழ்ந்து சுதந்திரமாக அலைந்து திரிந்து பொழுதைப் போக்கியது.

ஒரு நாள் நகரத்துப் பூனை கிராமத்தில் கிடைக்கும் எளிமையான உணவுகளைப் பற்றி ஏளனமாகப் பேசியது. நகரத்து மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் பற்றியும் நாகரீகத்தைப் பற்றியும், அங்கு கிடைக்கும் விதவிதமான உயர்ரக உணவுகளைப் பற்றியும் பெருமையாகப் புகழ்ந்தது. நகரத்தின் அருமை, பெருமைகளையெல்லாம் கூறி, நகரத்தைப் பார்க்க வருமாறு கிராமத்துப் பூனையை அழைத்தது.

நண்பனின் அழைப்பை ஏற்ற நாட்டுப்புறப் பூனை, நகரத்துப் பூனையுடன் நகரத்திற்குச் சென்றது. கிராமத்துப் பூனைக்கு நகரப் பூனை நகரின் அழகையெல்லாம் சுற்றிக் காட்டியது. நகரின் அழகையும் நாகரீகத்தையும் கண்டு கிராமத்துப் பூனை வியந்தது. பெரிய பெரிய உணவு விடுதிகளில் விதவிதமாக உணவுப் பண்டங்கள இருப்பதையும் கண்ட கிராமத்துப் பூனை பார்த்துப் பார்த்து ஆச்சரியமடைந்தது. நகர வாழ்க்கை இன்பமானது என்று எண்ணியது.

நகரப் பூனை தனது விருந்தினனான கிராமத்துப் பூனைக்கு சிறப்பாக விருந்து வைக்க விரும்பியது. அதற்காக ஒரு பெரிய மாளிகைக்கு அழைத்துச் சென்றது. அம்மாளிகையிலுள்ள மிகப்பெரிய சமையலறைக்குள் நுழைந்தன. அங்கே விதவிதமான தின்பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த பலவிதமான உணவு வகைகளைச் சுவைத்து உண்ணத் தொடங்கின. இப்படி ருசியான உணவு வகைகளை தனது கிராமத்தில் பார்த்ததே இல்லையே! நகரப் பூனை மிகவும் கொடுத்து வைத்தது என்று எண்ணி கிராமப் பூனை பெருமூச்சிவிட்டது.



பூனைகள் சுவைத்து உண்ணத் தொடங்கும்போது சமையலறையில் ஓசை வருவதைக் கேட்ட மாளிகையில் உள்ள காவல் நாள் உள்ளே பாய்ந்து பூனையைப் பிடிக்கத் தாவியது. இதனைக் கண்டு பதறிப்போன பூனைகள் ஓடி பதுங்கிக் கொண்டன. பூனைகள் வெளியே வரட்டும் என்று காவல் நாய் வெகு நேரம் அங்கேயே காத்துக் கொண்டிருந்தது.

வெளியே வந்தால் நாய் தங்களைக் கொன்றுவிடும்என அஞ்சி நடுங்கிய பூனைகள் இரண்டும் பதுங்கியிருந்த இடத்திலேயே பசியோடு கிடந்தன. நீண்ட நேரம் பூனைகளைக் காணாததால் காவல் நாய் சமையலறையை விட்டு அகன்றது. நாய் போனதை உறுதி செய்து கொண்டபின் உடம்பெல்லாம் நடுங்க பூனைகள் இரண்டும் பதுங்கிய இடத்திலிருந்து வெளியேறி தப்பிப் பிழைத்து வீதிக்கு வந்தன.

அஞ்சி நடுங்கிய நாட்டுப்பூனை, நகரத்துப் பூனையைப் பார்த்து நண்பனே! அஞ்சி அஞ்சி செத்துப் பிழைக்கும் இந்த அவல வாழ்க்கையும் ஆடம்பரமும் எனக்கு வேண்டவே வேண்டாம். எந்த அச்சமும் இல்லாத அமைதியான ௭ளிமையான கிராமத்து வாழ்க்கையே எனக்குப் போதும். உனக்கும் உன் நகர வாழ்க்கைக்கும் ஒரு கும்பிடு என்று கூறி விடைபெற்றுக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடத் தொடங்கியது.

★★★★★★★★★★★★★★

## திருடன் கற்றுணர்ந்த உண்மை

மீனவன் ஒருவன் ஒரு நாள் இரவு நேரத்தில் ஒரு தோட்டத்திலுள்ள குளத்தில் திருட்டுத்தனமாக மீன் பிடிப்பதற்காக வலை விரித்திருந்தான். அந்தத் தோட்டத்து சொந்தக்காரனுக்கு இது எப்படியோ தெரிந்து விட்டது. உடனே தன் ஆட்களுடன் நான்கு பக்கங்களிலும் சுற்றி வளைத்தான்.



எல்லோரும் கையில் தீப்பந்தங்களுடன் திருடனைத் தேட ஆரம்பித்தார்கள். இதற்குள் மீனவன் தன் உடம்பில் சாம்பலைப் பூசிக்கொண்டு ஒரு மரத்தடியில் சாதுவைப்போல் உட்கார்ந்துவிட்டான்.

திருடனைத் தேடி வந்த ஆட்கள் இங்கும் அங்கும் ஓடினார்கள். அவர்களால் மீனவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், திருநீர் அணிந்து மரத்தடியில் தியானம் செய்து கொண்டிருந்த ஒரு சாதுவைப் பார்த்தனர். ஒரு பெரிய மகான் அந்தத் தோட்டத்திற்கு வந்திருக்கிறார் என்ற செய்தி மறுநாள் காலையில் ஊர் முழுவதும் பரவியது.

ஏராளமான மக்கள், மலர்கள், பழங்கள இனிப்பு வகைகள் முதலியவற்றைக் காணிக்கையாகக் கொண்டு வந்து சாதுவை வணங்கினர். சாதுவின் முன்னால் பணம் குவிய ஆரம்பித்தது. அந்த மீனவனோ, இது என்ன விந்தை! நான் உண்மையான சாது அல்ல. என்றாலும் மக்கள் என்மீது இவ்வளவு பக்தி செலுத்துகிறார்களே! உண்மையாகவே சாதுவாகி விட்டால் நிச்சயமாக பகவானை அடைவோம் என்று எண்ணத் தொடங்கினான்.

கபடத்தனமான முயற்சிக்கே இவ்வளவு விழிப்புணர்வு ஏற்பட்டது. உண்மையாகவே சாதனைகள் செய்தால் எவ்வளவு பயன் விளையும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அப்போது எது உண்மை, எது உண்மை இல்லை என்பதை அறிய முடியும்.

★★★★★★★★★★★★★★




- 1520-பேர்டினண்ட் மகெலன் சிலியின் புதிய நீரிணை ஒன்றைக் கண்டுபிடித்தார். இது பின்னர் மகலன் நீரிணை எனப் பெயர் பெற்றது.
- 1805-டிரபல்கார் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள், பிரெஞ்சு மற்றும் ஸ்பானியக் கூட்டுப் படைகளின் கடற்படையை வென்றன. இவ்வெற்றி பிரித்தானியக் கடற் படையை 20 ஆம் நூற்றாண்டு வரை இப்பிராந்தியத்தின் பெரும் கடற்படை வல்லரசாக ஆக்கியது.
- 1805-ஊல்ட் என்ற இடத்தில் ஆஸ்திரியா, நெப்போலியனிடம் சரணடைந்ததது. நெப்போலியன் 30 ஆயிரம் பேரைச் சிறைப்பிடித்தான்.
- 1824-ஜோசப் ஆஸ்ப்டின் போர்லண்ட் சிமெந்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1837-அமெரிக்கப் பழங்குடித் தலைவன் ஒசியோலா கைது செய்யப்பட்டான்.
- 1861-அமெரிக்க உள்நாட்டுப்போர்:அமெரிக்கப் படைகள் கூட்டமைப்பினரிடம் வேர்ஜீனியாவில் தோற்றனர். ஆபிரகாம் லிங்கனின் நெருங்கிய நண்பர் எட்வேரட் பேக்கர் கொல்லப்பட்டார்.
- 1876-யாழ்ப்பாணத்தில் கொலரா நோய் வேகமாகப் பரவியது.
- 1879-தொமஸ் எடிசன் தனது முதலாவது தொழில் ரீதியான மின்குமிழைப் பரிசோதித்தார். இது 13 மணி நேரம் எரிந்தது.
- 1892-உலக கொலம்பியக் கண்காட்சி சிக்காக்கோவில் அதிகாரப் பூர்வமாகத் திறக்கப்பட்டது.
- 1945- பிரான்சில் முதற்தடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1969-சோமாலியாவில் இடம்பெற்ற இராணுப் புரட்சியில் சியாட் பார் பதவியைக் கைப்பற்றினார்.
- 1983-நிறைகளுக்கும் அளவைகளுக்குமான 17-வது அனைத்துலகக் கருத்தரங்கில், முழுமையான வெற்றிடத்தில், துல்லியமாக 1/299, 792, 458 வினாடி நேரத்தில் ஒளி செல்லும் பாதையின் நீளமாக ஒரு மீட்டர் வரையறுக்கப்பட்டது.
- 1987- இந்திய இராணுவத்தினரால் யாழ். போதனா வைத்திய சாலையில்மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மருத்து வர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003-குறுங்கோல் ஏரிசின் படங்கள் எடுக்கப்பட்டன.

பிறப்புகள்

- 1833- அல்பிரட் நோபல், சுவீடன் நாட்டு கண்டுபிடிப்பாளர், நோபல் பரிசை ஆரம்பித்தவர் (இ.1896)
- 1937-தேங்காய் சீனிவாசன், தமிழ் நாடக, திரைப்பட நடிகர் (இ1988)

இறப்பு

- 1835-முத்துசுவாமி தீட்சிதர், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர். (பி.1776)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முத்துசுவாமி தீட்சிதர்



முத்துசுவாமி தீட்சிதர் 1776 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி பிறந்தார். இவர் சிறுவயதிலிருந்தே தெலுங்கு, சமஸ்கிருதம், சங்கீதம் மூன்றையும் தன் தந்தையாரிடமே கற்றார். காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம் முதலிய இலக்கணங்களையும் முறையாக கற்று, நாத உருப்படிகளை இயற்றும் திறனையும் பெற்றார்.

இவருடைய முதல் கிரிதி மாயாமாளவகௌளையில் சிறீ நாதாதி குருகுஹோ ஜயதி என்பதாகும். இவர் பதினாறு கணபதிகள் பெயரில் ஷோடஸ கணபதி கீர்த்தனைகளையும் திருச்சிராப்பள்ளியில் மாத்ருபூதேஸ்வரரின் பேரில் யமுனா கல்யாணியில் ஜம்பூபதே (பஞ்சலிங்க கிருதி என்ற கிருதியையும், சிறீரங்கம் ரங்கநாத ஸ்வாமியின் பேரிலும் கிருதிகள் இயற்றியுள்ளார்.

இவருடைய கிருதிகளில் காணப்படும் சிறப்பம்சம் மத்திமகால சாகித்தயம் ஆகும். 35 தாள முறைகளையும் கையாண்டுள்ளார்.

அழியாப் புகழ் பெற்ற தீட்சிதர் 1835 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகை அன்று மீனலோசனி பாப மோசனி என்ற கிருதியைப் பாட கேட்டுக் கொண்டு இரு கைகளையும் தலை மேல் குவித்து சிவே பாஹி... சிவே பாஹி ஓம் சிவே என்றார். உடனே அவரது ஆவி ஒளி வடிவாகப் பிரிந்தது. தற்சமயம் இவரது சமாதி எட்டயபுரத்தில் அமைந்துள்ளது.

# மனித சக்தி மகத்தான சக்தி



...ஒரு கம்பளிப்பூச்சி பற்றிய அழகான கதை ஒன்று உள்ளது. மற்ற கம்பளிப்பூச்சிகளைப் போலவே உண்ணவும் உறங்கவும் மட்டுமே தான் உதித்ததாக அது எண்ணிக் கொண்டிருந்தது. ஆனாலும் அது மகிழ்ச்சியின்றி இருந்தது. தன் வாழ்க்கையில் இன்னமும்தான் உணராத ஒரு பரிமாணம் இருப்பதை அது எப்படியோ பிறகு உணர்ந்து கொண்டது.

ஒருநாள் ஒரு விநோதமான ஏக்கத்தில், அசைவற்றும் அமைதியாகவும் இருக்க அது முடிவெடுத்தது. ஒரு மரத்தின் கிளையில் தொங்கிய அது தன்னைச் சுற்றி ஒரு கூட்டை கட்டிக் கொண்டது. வசதியின்றி இருந்தபோதும் அந்தக் கூட்டுக்குள் விழிப்புணர்வுடன் காத்திருந்தது. அதனுடைய பொறுமை கடைசியில் பலன் கொடுத்தது. ஒருநாள் அந்தக் கூடு வெடித்து அழகான கண்ணைப் பறிக்கும் இறக்கைகளுடன் வெளிவந்து வானத்தை வட்டமிட்டது. இப்போது அது வெறுமனே புழுவாக இருப்பதிலிருந்து விடுதலை அடைந்து சுதந்திரமாகவும் எல்லையற்றதாகவும் அழகானதாகவும் ஆகிவிட்டது.


ஒருமுறை மாற்றம் நிகழ்ந்தபிறகு, அந்த வண்ணத்துப்பூச்சி, மீண்டும் புழுவாக மாறவே முடியாது. அது கூட்டுக்குள் இருந்தபோது தன் உள்நிலையுடன் ஒன்றிணைந்து இருந்தது. அதுவே, அது தன் இறுதி இயல்பை அடையக் காரணமாக இருந்தது. அந்தக் கூட்டுக்குள் அதற்கு என்ன நிகழ்ந்ததோ அதை யோகாவாக சித்தரிக்க முடியும். எல்லையற்றதாக மாற, எப்போதும் யோகா ஒரு வழியாக இருக்கிறது.

யோகா மனிதர்களில் மாற்றம் நிகழ்த்தி விடுதலையைத் தந்து, அவர்கள் எல்லையற்ற் நிலையை அடையச் செய்கிறது. மனிதர்கள், மிருகங்கள் போல வெறுமனே உண்டு உறங்க வரவில்லை. அவர்கள் மாற்றத்திற்கு உட்பட்டவர்கள். தான் கட்டுக்குள் இருப்பதை அறிந்து தீவிரமான ஆவலுடன் உள்நிலை மாற்றத்திற்கு முயற்சித்தால் மட்டுமே ஒவ்வொருவரும் தன் இயல்புநிலையான மனிதராக பரிணமிக்க முடியும். இதற்கான திறமை நம் எல்லோரிடமும் இருக்கிறது.

தியானலிங்கம் யோகத் திருக்கோயில், யோகா அறிவியலின் சாரம்-தியானம் பற்றி ஏதும் அறியாதவர் கூட, தியானலிங்கத்தின் சக்தி எல்லைக்குள் சில நிமிடங்களுக்கு அமைதியாக அமர்ந்திருக்கும்போது ஆழமான தியானத்தன்மையை அனுபவபூர்வமாக உணர முடியும்

சமஸ்கிருத மொழியில் த்யான என்றால் தியானம் என்பதும் லிங்க என்றால் வடிவம் என்பதும் பொருள்.

தியானலிங்கம், ஒரு தனித்துவமான சக்தி உருவமாக, யோக அறிவியலின் சாரமாக கடந்த 2000 வருடங்களில் முழுமையடைந்த முதல் தியானலிங்கமாக விளங்குகிறது.



தியானலிங்க யோகத் திருக்கோயில் எந்த ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை முறையையும் சாராமல் எந்த விதமான சடங்குகள், பிரார்த்தனை மற்றும் வழிபாடுகளின் தேவையின்றி ஆழமான தியானத்தன்மையை வழங்கும் இடமாக உள்ளது. மத வேறுபாடுகளைக் கடந்து, மனிதகுலம் ஒருங்கே அமைதி, வளர்ச்சி மற்றும் நல்வாழ்வு அமையப் பெறுவதற்கான மிக அரிய சக்திவாய்ந்த வாய்ப்பினை வழங்குகிறது. தியான லிங்கத்தின் அதிர்வூட்டும் சக்திப்பிரவாகமானது, ஒருவரை அமைதி மற்றும் நிச்சலனத்தின் ஆழமான நிலையை உணரச் செய்து வாழ்வின் அடிப்படையான இயல்பை வெளிப்படுத்துகிறது.

கோயிலின் நுழைவாயில் நிறுவப்பட்டுள்ள சர்வதர்ம ஸ்தம்பம் ஒருமையின் அடையாளமாக விளங்கும் வண்ணம், பல்வேறு மதங்களாகிய இந்து, இஸ்லாம், கிறிஸ்துவம், சமணம், தாவோயிஸம், ஜோராஸ்டரினிஸம், ஜூடாயிஸம், புத்தமதம் மற்றும் ஷின்டோ ஆகியவற்றின் சின்னங்கள் பொறிக்கப்பட்டு வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் வரவேற்புப் பத்திரத்தை வாசித்து நிற்கிறது.

## ஆன்மீகம் 13

உலகளாவிய முக்கியத்துவம் மற்றும் மத ஒருமைப்பாடு இவைகளை உருவாக்கி முன்னெடுத்துச் செல்லும் குறிக்கோளுடன், வருடம் முழுவதும் தனித்துவமான செயற்பாடுகளை தியானலிங்கம் வழங்குகிறது. வெவ்வேறு நாடு மற்றும் கலாச்சாரப் பின்னணியிலிருந்து வருகின்ற திறமையான பாடல் குழுவினரால் அளிக்கப்படுகின்ற் சொற்களற்ற ஓசைகளை அர்ப்பணிப்பது தினசரி ஆராதனைகளில் அடங்குகிறது. இத்தகைய உச்சாடனைகள், தியானலிங்க வளாகத்தின் தியானத் தன்மையை உள்வாங்குவதற்குத் துணை செய்கிறது.

ஈஷா யோக மையத்தின் மையப் புள்ளியாகத் திகழும் தியானலிங்கத் திருக்கோவில் தியானம் நிகழ்த்துவதற்கான சிறந்த இடமாக உலகளாவிய அளவில் புகழ்பெற்றுள்ளது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# மீண்டும் ஒருமுறை தமிழருக்கான நீதி மறுக்கப்பட்டுவிட்டது...!



...வவுனியா சிறையில் பட்டப் பகலில் இடம்பெற்ற இராணுவத்தின் அட்டூழியம் மூடி மறைக்கப்பட்டு விட்ட்து. அதனை மகிந்த ராஜபக்சவின் உயர்நீதி மன்றமும் உறுதிப் படுத்திவிட்டது.

மைந்தன் நிமலரூபனின் கொலைச் சம்பவம் அச்சமயம் தெட்டத் தெளிவாக உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்ட விடயம். இருப்பினும், சர்வ சாதாரணமாக இலங்கையின் நீதி மன்றம் இக்கொலை தொடர்பான வழக்கை தள்ளுபடி செய்துள்ளது.

சிறைக்குள் கைதிகள் மீது நடத்தப்பட்ட இந்த கொலைச் சம்பவம் இன்றும் குருதி வடியும் காயங்களாய் எம்மவர் மனங்களில்...

வவுனியாச் சிறையில் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்கக்கோரி உண்ணா விரதமிருந்தனர். அதனை முறியடிக்க இராணுவம் தயாரானது.

ஏற்கனவே வவனியா கடையொன்றில் இருந்த மண்வெட்டித் தடிகளை படையினர் விலைக்கு வாங்கிவைத்துக் கொண்டு தாயராக இருந்தனர்.

திடீரென கைதிகளைப் பார்க்கச் சென்ற சிறைக்காவலர்கள் பணயக் கைதிகளாக பிடிக்கபட்டதாக ஒரு செய்தி பரவியது.

தம்மை விடுவிக்காவிடில் சிறைக் காவலர்களை கொலை செய்யப் போவதாக அரசியல் கைததிகள் மிரட்டினராம். ஆனால், அவர்களைத் தாக்குவதற்கு இப்படியயொரு நாடகத்தை நடாத்தியதே இராணுவம்தான். பல ஆண்டு காலமாக காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் ஏன் இவ்வாறு நடந்துகொள்ளப் போகிறார்கள்.

அதைச்சாட்டாக வைத்து உள்ளே புகுந்த இராணுவத்தினர், அனைத்து தமிழ் அரசயல் கைதிகளையும் கண்மூடித் தனமாக தாக்கினார்கள், கால், கைகள் எலும்புகள் நொறுங்கும் அளவுக்கு பலமான அடி.

எல்லோரையும் அடித்து காயங்களை ஏற்படுத்தியதன் பின், சிறைக் கூட வாகனத்தில் ஏற்றி அனுராதபுரம் சிறைக்கு கொண்டு சென்றனர். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களை மருத்துவ விடுதிக்கு கொண்டு போகாமல் சிறைக்குள் அடைத்து வைத்தனர்.

அதில் நிமலரூபன் துடிதுடிக்க மரணமானார். மற்றொரு கைதி சில நாட்களின் பின் மரணமானார். இறந்த உடலை உறவினர்களிடம் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டனர்.

பின்பு நீதிமன்றத்திற்குச் சென்ற போதிலும் நிபந்தனையின் பேரில் பலத்த காவலுக்கு [illegible] தகனம் செய்[illegible] அப்பட்டமான மனித உரிமை மீறல், இனப்படுகொலை.

சாட்சியங்கள் ஏதுமின்றி அரசுப் படைகளினால் நடத்தப்பட்ட கொலை. பின்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் சட்டத்தின் கீழ் வழக்கொன்று தாக்கல் செய்யப் பட்டது.

இந்த வழக்கை பிரதம நீதியரசர் மோகன் பீரிஸ் விசாரணை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளார். நாடு நாடாகச் சென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசு, மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என பரப்புரை செய்தவரை, மகிந்த ராஜபக்ச பிரதம நீதியரசராக ஏன் நியமித்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

நிமலரூபன் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் மரணமானார். அவ்வாறான கலவரங்களில் இதுபோன்ற மரணங்கள் சாதாரணமாக ஏற்படுவதுண்டு. அதனால் இதில் அடிப்படை மனித உரிமைகள் ஏதும் மீறப்படவில்லை என அவர் தீர்ப்பளித்து மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

இராணுவம் கடற்படை, விமானப்படை, காவற்றுறை, அனைத்தும் ஜனாதிபதி வசம் உள்ளது. இப்போது நீதிவழங்குவதையும் அவர் கையிலெ [illegible] வவுனியா சிறையில் இ[illegible] மிகப்பெரிய இனப்படுகொலையை உயர் நீதிமன்றமே மூடிமறைப்பது என்பது சாதாரண விடயமல்ல.

மோகன் பீரீஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்படக் கூடாது என சர்வதேச மன்னிப்புச் சபை ஏற்கனவே தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசின் சார்பில் வாதாடியவர் பிரதம நீதியரசராக பொறுப்பு வகிக்க முடியாது என மேலும் மனித உரிமை அமைப்புகளும் சுட்டிக்காட்டி இருந்தன.

நிமலரூபன் கொல்லப்பட்ட இடத்தில் மகிந்த அரசு பாரிய குற்றம் இழைத்துள்ளது எனத் தீர்ப்பளிக்க வேண்டிய உயர்நீதிமன்றம் நகைப்புக்குரிய முடிவொன்றை வழங்கியுள்ளது.

நீதி மீண்டும் ஒருமுறை தமிழருக்கு மறுக்கப்பட்டுள்ளது. என்றே குறிப்பிட வேண்டும்.

வீ.ஆர். வரதராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் ஒற்றுமையை யாரும் சீர்குலைக்க முடியாது

## மாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன்

(கொழும்பு)

**கூட்டமைப்புக்குள் அங்கம் பெறும் கட்சிகளோடு கலந்தாலோசிக்காது ஒரு சில முடிவுகள் எடுக்கப்பட்டதை ஆட்சேபித்து எமது அதிருப்திகளை நாம் தெரிவித்து வந்திருக்கின்றோமே தவிர எச்சந்தர்ப்பத்திலும் எக்காரணங்களுக்காகவும் கூட்டமைப்பின் ஒற்றுமையை சீர்குலைக்க நாங்கள் காரணமாக இருக்கமாட்டோம் என புளொட் அமைப்பின் தலைவரும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் இடம்பெற்ற இழுபறி நிலைபற்றியும் முரண் சார் நிகழ்வு பற்றியும் விளக்கமளித்த போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சர் பதவி தரப்படவில்லையென் பதற்காகவோ எங்களை முன்னிலைப் படுத்தப்படவில்லையென்பதற்காகவோ நாங்கள் எந்த காரியங்களையும் செய்ய வில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அங்கம் பெற்று அதிக வாக்குகளை நாம் பெற்றிருந்தும் வட மாகாண சபை தேர்தலுக் குப் பின் எடுக்கப்பட்ட ஒரு சில முடிவுகள் எம்மை கலந்தாலோசிக்காது எடுக்கப்பட்ட காரணத்தினால் தொடர்ந்தும் இவ்வாறான நிலை ஏற்படக் கூடாது என்பதற்கு ஆட்சே பனை தெரிவிப்பதற்காகவே இவ்வாறு நடந்து கொண்டோம்.

எக் காரணத்தையிட்டும் கூட்டமைப்பின் ஒற்றுமையை எவரும் உடைத்து விட முடியாது என்பதே உண்மை. நடைபெறப் போகின்ற மாகாண சபை ஆட்சியில் எமது ஆதரவு பலம் கொண்டதாகவே இருக்கும்.

நாங்கள் ஒற்றுமையாகவேயுள்ளோம் என்பதைக்காட்ட கடந்த வெள்ளிக்கிழமை வலிமேற்கு திறப்பு விழாவொன்றில் நாம் கலந்துகொண்டுள்ளோம்.


நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற விருக்கும் மாகாண சபையின் கட்டடத்துக்கு பால் காய்ச்சும் வைபவத்திலும் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாகாண சபை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருக்கும் வைபவத்திலும் நாம் ஒன்றுபட்ட முறையில் செயற்படவுள்ளோம்.

ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்குள் மூன்று கட்சிகளே கூட்டாக இருந்தன. அக்கட்சிகளுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக ஆரம்பத்தில் என்னால் உணரமுடிந்தது.

இதில் இன்னுமொரு விடயம் என்ன வென்றால் கட்சியொன்றுக்கு ஒரு அமைச்சு பதவியை முன்னதாகவே வழங்கிவிட்டு அவரைத் தான் மற்றவர்கள் ஆதரிக்க வேண்டுமென வலியுறுத்துவது நியாயமற்ற தாகும்.

இந்த முரண் நிலைகள் ஏற்பட ஒவ் வொருவரும் தனித் தனியாக யோசித்து தீர்மானம் மேற்கொண்டதே காரணம். அன்றி புளொட் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய மூன்று கட்சிகளும் சேர்ந்து பேசி தீர்மானம் எடுக்கவில்லையென்பதே உண்மை. 40 ஆயிரம் வாக்குகளை இந்த மாகாண சபைத் தேர்தலில் நான் பெற்றிருந்தேன். மக்கள் பிரதிநிதிகளைத் தான் நாம் முதன்மைப் படுத்த வேண்டுமென கூறப்பட்டு வந்த விட யத்தில் நாங்கள் புறக்கணிக்கப்பட்டதாகவே கருதுகிறோம்.

முதல் அமைச்சர் ஜனாதிபதி முன்னிலை யில் பதவிப் பிரமாணம் செய்த அன்றைய தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித்தை கூட்டமைப்பின் சார்பில் சந்தி க்கச் சென்ற போது அதுவிடயமாக என்னை அழைக்கவுமில்லை; தகவல் தெரிவிக்க வுமில்லை. தங்கள் விருப்பப்படியே அவர்கள் சென்றிருந்தார்கள்.



நான் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தும் புறக்கணிக்கப்பட்டு விட்டேன். மக்கள் பிரதி நிதிகளையே சகல விடயங்களுக்கும் முதன் மைப்படுத்துவோமென்று கூறி வருபவர்கள் இவ்வாறு நடந்து கொண்டிருக்கக்கூடாது.

இந்த நிலைமைகள் தொடரக் கூடாது என் பதை மனங் கொண்டே எனது அதிருப்தியை வெளிப்படுத்த சில விடயங்களை வெளிக் காட்ட வேண்டியிருந்ததே தவிர எனக்கு அமைச்சர் பதவி தரவில்லையென்றோ எனது கட்சி கவனிக்கப்படவில்லையென் பதற்காகவோ நான் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

எப்படி இருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை யாரும் குலை த்து விட முடியாது. குலைத்து விட நாம் அனு மதிக்கப்போவதுமில்லை. தலைமைத்துவத் தின் வழிகாட்டலுக்கு அமைய நடந்து கொள்வதில் நாம் ஆர்வமாக இருக்கிறோம் என்றும் சித்தார்த்தன் தெரிவித்தார். (அ-2)

# மாநாட்டை புறக்கணிக்குமாறு கமரூனுக்கு பொதுச் சபை வெளியுறவு குழு அழுத்தம்

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்கு செல்வதை பிரித்தானியாவின் பொதுச்சபை வெளி யுறவுக் குழு கண்டித்துள்ளது

கமரூன் தமது பயணத்தை கைவிட வேண்டும் என்று அந்தக்குழு கோரியுள் ளது.

பொதுநலவாயத்தின் கொள்கையும் எதிர்காலமும் என்ற தலைப்பில் இந்தக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையின்படி, இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இந்தநிலையில் 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டம் கொழும்பில இடம் பெறுவது பிழையான விடயம் என்று வெளியு றவுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பிரித்தானிய பிரதமர் கொழும்பு மாநா ட்டில் பங்கேற்க எடுத்த தீர்மானம் குறித்து பகி ரங்கமான அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்றும் வெளியுறவுக்குழு கோரியுள்ளது.

2011 ஆம் ஆண்டு பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் பின்னர், பொதுநலவாய நாடுகளின் ஆலோ சனை சபை, மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களை காரணம் காட்டி, இலங்கையில் 2013ஆம் ஆண்டு மாநாட்டை நடத்துவது குறித்து எச்சரிக்கையை விடுத்திருந்தமையை பிரித்தானிய பொதுச்சபை வெளியுறவுக்குழு சுட்டிக்காட்டி யுள்ளது.

இதேவேளை, டேவிட் கமரூன் இல ங்கை மாநாட்டில் பங்கேற்பதை பிரித் தானியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தா னிகரகம் உறுதிப்படுத்தி அறிக்கை ஒன் றையும் வெளியிட்டுள்ளது. (அ-2)

# பயிற்சி நெறி

(தும்பளை)

வடமாகாண காணி, நிர்வாகத் திணைக் களத்தின் சம்பள மறு சீரமைப்பு மற்றும் காணி முகாமைத் துவம் தொடர்பான பயிற்சி நெறி எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி நூலக ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, இப்பயிற்சி நெறி யில் திணைக் களத்திலுள்ள அனைவரை யும் கலந்து கொள் ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-9-19)

### பொதுநலவாய மாநாட்டு

# பாதுகாப்புப் பணிகளில் 55 ஆயிரம் படையினர்

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய மகாநாட்டில் கலந்து கொள்ளும் அமைப்பு நாடுகளின் தலைவர்கள், இராஜதந்திரிகளின் பாதுகாப் புக்கென அதிநவீன உபகரணங்களுடன் சுமார் 14 ஆயிரத்து 676 பாதுகாப்பு படை யினரும், இதற்கு மேலாக அவசர தேவை யின் பொருட்டு 40ஆயிரம் படையினரும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும் வெளிநாட்டுத் தலைவர்கள் அவர்களது துணைவிமார் மற்றும் அதிகாரிகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் 845 வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மெரிசிடிஸ் பென்ஸ் ரக கார்கள் 54 உம் மற்றும் நிஸான் ரக கார்கள் 110 உம் அடங்குகின்றன.

இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற் கென 200 டிபெண்டர் ரக வாகனங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

இவை ஒவ்வொன்றிலும் எட்டு பாதுகாப்புப் படை வீரர்கள் கடமையிலிருப்பர் என்றும் அந்தச் செய்திகளில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளது. (அ-2)




யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின் போது யாழ். இந்துக் கல்லூரியின் தற்போதைய பிரதி அதிபர் சதா.நிமலனுக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தங்கப்பதக்கத்தினை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:- மானிப்பாய் செய்தியாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்ட நிலைய சட்டவரைபை மீள பரிசீலிக்கிறது அரசாங்கம்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)

**பொருளாதார அபிவிருத்தி எனும் போர்வையில் அரசாங்கம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள சூதாட்ட நிலையங்களை சட்டபூர்வமாக்கும் சட்டவரைவுக்கு நாட்டுக்குள் எதிர்ப்புகள் வலுவடைய ஆரம்பித்துள்ளதால் இவ்விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என ஆளுந்தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



எனவே, இக்குறிப்பிட்ட சட்டவரைவை அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதா? அல்லது பிற்போடுவதா? என்பது தொடர்பில் அரசாங்கம் தற்போது மீள்பரிசீலனை செய்து வருகிறது.

இது சம்பந்தமாக இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஆளுந்தரப்பின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தினேஷ் குணவர்த்தன,

'எந்தத் தரப்பினரும் பாதிப்படையாத வகையில் இன்றைய தினம் தீர்மானங்கள் முடிவான பிறகே நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதா? இல்லையா என்ற முடிவை அரசாங்கம் எடுக்கவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி மேலும் சில அபிவிருத்தி யோசனைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது" என்று மேலும் தெரிவித்தார்.

"அனைத்துக் களியாட்டங்களுக்குமான செயற்றிட்டம்" எனும் பெயரில் நாடாளுமன் றுக்கு அடுத்த வாரம் சமர்ப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள குறித்த சட்டவரைவுக்கு பொதுபலசேனா, ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் மற்றும் ஏனைய பௌத்த, கத்தோலிக்க மத அமைப்புகளும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதோடு சட்டமூலத்தை அரசாங்கம் உடன் மீளப்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அறிவூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக தொழிற்துறை மன் றத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினை மேம்படுத்தும் ஓர் அங்கமாக அறிவூட்டல் செயலமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

குடாநாட்டைச் சார்ந்த கைத்தொழில்துறை சார்ந்தோர், குறிப்பாக உணவு உற்பத்தி மற்றும் பதனிடல், உணவு கையாளும் துறையினர், மென்பான உற்பத்தியாளர்கள், உப உணவு தயாரித்தல் துறையினர், வெதுப்பக உரிமையாளர்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு பயனுள்ளதாக அமையவுள்ள இச் செயலமர்வு அத்துறைசார் வல்லுநர்களால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் இல.124, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலமைந்துள்ள யாழ்.வர்த்தக தொழிற்துறை மன்றத்துடன் தொடர்பு கொண்டு தமது கலந்து கொள்ளலை உறுதிப்படுத்துவதுடன் இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0212226609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ்.வர்த்தக தொழில் துறை மன்றம் அறிவித்துள்ளது. (செ-7)

# மனித உரிமை மீறலுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்குக

## இல.மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பதாக கூறும் ஒழுங்கமைப்புக்கள், அது சம்பந்தமான தெளிவான ஆதாரங்களை முன்வைக்க வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சில அமைப்புக்கள் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.'

அவ்வாறு பாதுகாப்பற்ற சூழ்நிலை காணப்படுவதாக இருந்தால், அது சம்பந்தமான ஆதாரங்களையும் இந்த அமைப்புக்கள் முன்வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



கரவெட்டி தெற்கு பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின் போது.... (படம்:-கரணவாய் செய்தியாளர்)

# தபால் சேவையில் வருடாந்தம் 5 பில்லியன் ரூபா வரை நட்டம்

தபால் சேவையில் வருடாந்தம் 5 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக தபால் சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

உத்தேச தபால் கட்டண அதிகரிப்பின் ஊடாக, இந்த நட்டத்தை ஈடுசெய்ய முடியும் என அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

தபால் சேவைக்கான கட்டண திருத்தத்தை அமைச்சரவையின் அனுமதிக்காக விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தபால் திணைக்களம் இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் அல்லவெனவும் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டின் நிலைமைகள் தொடர்பில் தலைவர்களுக்கு விளக்குவோம்

## ஜோன் அமரதுங்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்காக இலங்கைக்கு வருகை தரவுள்ள சர்வதேச தலைவர்களிடம் நாட்டின் நிலைமை குறித்து விளக்கமளிக்கப் போவதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோத செயல்கள் குறித்து தாம் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கு விளக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் கைது, முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் கொலைகள் போன்ற வேறு காரணம் காட்டி பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க ஐக்கிய தேசியக் கட்சி கடந்த வாரத்தில் முடிவெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு ஆரம்பமாகவுள்ளது. குறித்த தினத்தை பொது விடுமுறையாக அறிவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது,

பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு இவ்வாறு பொது விடுமுறை அறிவிப்பது இலகுவாகும் என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

மாநாடு நடைபெறும் பகுதியில் அரச தனியார் நிறுவனங்கள் பல உள்ளதால் அவற்றில் கடமையாற்றுவோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்னைக் கருத்திற்கொண்டே உத்தியோக பூர்வமாக பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 2015 இல் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்

(கொழும்பு)

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பல தேர்தல்களை நடத்துவதற்கு அர்சாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் மூன்று தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தேர்தல்களை எந்தெந்த காலங்களில் நடத்துவது என்பது தொடர்பில் அரசாங்கத்தின் அரசியல் ஆலோசகர்கள் தயாரித்த அட்டவணைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கி யஸ்தர்கள் அங்கீகரித்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேல் மற்றும் தென் மாகாணங்களில் தேர்தல்களும் தொடர்ந்து 2014 ஒக்டோபர் மாதத்தில் ஊவா மாகாணத் தேர்தலும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபை தெற்கில் ஏற்படுத்தும் தாக்கம்

கடும் போக்குள்ள அரசியல் வாதிகளையும் அரசாங்கத்தை சார்ந்தவர்களையும் தவிர தெற்கில் பலர் வடமாகாண சபையின் தற்போதைய போக்கை முதிர்ந்த அரசியல் என்றே வர்ணிக்கிறார்கள்.

வடமாகாண சபையில் நடைபெறும் விடயங்களில் தெற்கில் சில கடும்போக்காளர்கள் வாயடைத்துப் போயுள்ளனர். அவர்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் இதுவரை பிடிகொடுக்கவே இல்லை. அவர்களுக்கு கூச்சலிட இதுவரை ஒரே ஒரு சந்தர்ப்பம்தான் கிடைத்தது. அதுதான் முதலமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்த கூட்டத்தின்போது தேசியக் கொடி ஏற்றாமல் இருந்த சம்பவம்.

அதன் பின்னர், வடக்கில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்து கொண்டு நடைபெற்ற பல வைபவங்களின்போது தேசியக்கொடி ஏற்றப்பட்டு இருந்தமையினால், அந்த விமர்சனமும் தெற்கில் அவ்வளவாக எடுபடவில்லை.

இலங்கைக் கடலுக்குள் அத்து மீறி வரும் தென் இந்திய மீனவர்களை தாம் எதிரிகளாக கருதவில்லை என்று வடமாகாண கடற்றொழில் அமைச்சர் கூறியதாக வெளியான செய்தியொன்றை பெரிதுபடுத்துவதற்கு விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஹம்மது முஸம்மில், எடுத்த முயற்சியும் பிசுபிசுத்துப் போய் விட்டது.

ஆனால், வடக்கில் சகலதும் சுமுகமாகவும் பரிபூரணமாகவும் நடைபெறவில்லை என்பதையும் தெற்கில் மக்கள் அறிந்துள்ளனர். வடக்கில் கடும் போக்காளர்களுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே தீவிர முறுகல் நிலை இருப்பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்களில் இனவாத போக்குள்ள சிலர், இந்த முறுகலின்போது தீவிர வாதிகளின் கை ஓங்க வேண்டும் என்றே நினைத்தார்கள்; நினைக்கிறார்கள். ஏனெனில் அப்போது தான் அவர்களுக்கு பிழைப்புக்கான தீனி கிடைக்கும்.

சம்பந்தனுக்கு வேண்டும் என்றால், எ-9 வீதியனூடாக வந்து தெற்கிலுள்ள மக்களுடன் சுமுகமாக வாழலாம் அல்லது புதுமாத்தளன் ஊடாக பிரபாகரன் சென்ற பாதையிலும் செல்லலாம் என அண்மையில் தொழில் நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சம்பிக்க இரணவக்க கூறியிருந்தார்.

அனேகமாக சம்பந்தன் புதுமாத்தளன் ஊடாக வழியை தேர்வு செய்வதையே அவர் விரும்பியிருக்கலாம். ஆனால், இதுவரை இடம்பெற்ற சம்பவங்களால் அவரும் ஏமாற்றமடைந்திருப்பார்.

இருந்தபோதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கடும் போக்காளர்களினதும் வடக்கின் யதார்த்தத்திற்கும் இடையே அகப்பட்டுக் கொண்டு இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. முதலமைச்சர் வேட்பாளரை தெரிவு செய்தல், முதலமைச்சின் சத்தியப் பிரமாணம், மாகாண அமைச்சரவையை தெரிவுசெய்தல், மாகாண சபை உறுப்பினர்களின் சத்தியப் பிரமாணம் போன்ற விடயங்களின் போது, ஏற்பட்ட நிலைமைகள் இந்த கடும்போக்கு -மிதவாத மோதலையே எடுத்துக் காட்டுகிறது.

முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் விக்கினேஸ்வரனை நியமித்ததோடு, வடமாகாண சபையின் போக்கே மாறியது எனலாம். சிங்கள சமூகத்தை அறிந்த அச்சமூகத்தோடு பழகிய ஒருவர் என்ற முறையில் அவர் பதவியை ஏற்றமை வடமாகாண சபை மத்தியஅரசாங்கத்தோடு கடமையாற்றுவதற்கு வசதியாக அமையும் என்று ஊகிக்கலாம். மரபு ரீதியான தமிழ் தலைவர் ஒருவர், அப்பதவியை ஏற்றிருந்தால் இப்போதே மத்திய அரசாங்கத்தோடு முரண்பாடுகளும் மோதல்களும் தோன்றியிருக்கவும் கூடும்.

வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமை தெற்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திருக்கிறது. விக்னேஸ்வரன் தமது கட்சித் தலைவர் முன்னிலையில் அல்லது ஜனாதிபதி அல்லாத வேறொருவர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வார் என்றே தெற்கில் பலர் நினைத்தனர். போனஸ் உறுப்பினர்கள் இருவரை நியமிக்கும்போது தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியும் நியமிக்கப்படுவார் என பலர் நினைத்தனர். ஏனெனில்,தெற்கில் அவ்வாறு தான் அரசியல் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. அனேகமாக தேர்தலில் தோல்வியடைந்தாலும் பெயர் உள்ளவர்களுக்கு அரசியலில் இடம் கிடைக்கும். ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அந்த மரபையும் மீறியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய வடமாகாண அமைச்சரவையை நியமித்த போதும் தெற்கில் பலருக்கு அது நம்ப முடியாத விடயமாகியது. ஒரு கூட்டணி ஆட்சி அமைத்தால் அனேகமாக கூட்டணியின் உறுப்புக் கட்சிகளின் தலைவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவே அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என பரவலாக எதிர்பார்ப்புகள் இருந்தபோதும், திறமையானவர்களே அமைச்சுப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதும் நல்ல முடிவாக அமைந்திருந்தது. மத்திய அரசாங்கத்தின் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படும் போது பல சந்தர்ப்பங்களில் ஒரே துறை, பல பிரிவுளாக பிரித்து பல அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சில சந்தர்ப்பங்களில் காணி அமைச்சராக ஒருவரும் காணி அபிவிருத்தி அமைச்சராக மற்றொருவரும் நியமிக்கப்பட்டதும் உண்டு.

ஒருமுறை கல்வி அமைச்சராக ஒருவரும் உயர் கல்வி அமைச்சராக மற்றொருவரும் கல்விச் சேவைகள் அமைச்சராக ஒருவருமாக மூன் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர். இந்த குழப்பநிலையும் வட மாகாண அமைச்சரவையில் அவ்வளவாக காண்பதற்கில்லை.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்குரிய அமைச்சுக்களை பொறுப்பேற்கும் போதும் ஜனாதிபதியின் முன்னிலையிலேயே பதவிப்பிரமாணம் செய்தார்.

வடமாகாணசபை தமக்குரிய பணிகளை மேற்கொள்வதற்காக நிதியினை பெற்றக்கொள்ள நிதி ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை செய்தியொன்று வெளியாகியிருந்தது. தெற்கில் வழமையாக நடப்பது என்னவென்றால், பதவிக்கு வரும் மாகாண முதலமைச்சர்கள், அரசாங்கம் தமக்கு வழங்கும் நிதியைக் கொண்டு மத்திய அரசாங்கம் சொல்வதை செய்வதே. அந்த விடயத்திலும் வடமாகாண சபை வித்தியாசமாக நடந்துகொண்டுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு மாகாணசபை முறையைப் பற்றியும் மாகாணசபை அதிகாரங்களைப் பற்றியும் செயலமர்வொன்றை நடத்த வேண்டும் என்று, வடமாகாண சபை தமது ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெற்கில் எந்தவொரு மாகாண சபையும் இது போன்றதோர் கோரிக்கையை இதுகால வரையும் விடுத்ததில்லையென்றும் நிதி ஆணைக்குழுவின் தலைவர் ஆரியரத்ன ஹேவக்கே கூறியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலம் புலிகள் மறுபிறவி பெற்றிருக்கிறார்கள் என்றும் ஆயுத பலத்தினால், பெற முடியாது போன தமிழீழத்தை அரசியல் ரீதியாக பெற்றுக் கொள்வதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறது என்றெல்லாம் கூறிய தென்பகுதி அரசியல் வாதிகள், வடமாகாண சபை தமக்குரிய அதிகாரங்களைப் பற்றி விளக்குமாறு மத்திய அரசாங்கத்தின் நிதி ஆணைக்குழுவிடமே கோரியதை எவ்வாறு விளங்கிக் கொள்வது?

இவ்வாறு வடமாகாண சபையின் புதிய நிர்வாகம் தென்பகுதி அரசியல் மீது ஒருவித தாக்கத்தை ஏற்படுத்திவந்த போதிலும், தமிழர் அரசியலில் காணப்படும் தீவிர வாதத்தின் கை ஓங்கினால் இந்த நிலைமை மாறும் என்பதும் தென்பகுதி அரசியல்வாதிகளுக்குத் தெரியும். உண்மையிலேயே வடக்கில் தற்போது, காணப்படும் அரசியல் பக்குவம் தீவிரவாதத்தின் கை ஓங்கினால் காணாமற் போய்விடும் தான். அந்த நிலைமையை உருவாக்க தென்பகுதி அரசியல்வாதிகள் மாகாணசபை நிர்வாகத்தை அசௌகரியத்திற்குள்ளாக்கும் வகையில் செயற்படவும் கூடும்.

**"வடமாகாண சபையில் நடைபெறும் விடயங்களில் தெற்கில் சில கடும்போக்காளர்கள், வாயடைத்துப் போயுள்ளனர். அவர்களுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் இதுவரை பிடிகொடுக்கவே இல்லை."**




-எம்.எஸ்.எம். ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2013-16.11.2013



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**வாழ்வில் புதுமையான அனுபவங்களை பெற வேண்டும் என்று விரும்பும் மிதுன இராசி நேயர்களே!**

**உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது உங்கள் இராசிக்குள்ளேயே குரு அமர்ந்து கொண்டு ஜென்ம குரு ஆதிக்கம் நடைபெறுவதால் வேலைப்பளு கூடும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்களை நம்பி செயற்பட்ட காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படும். அதிகரிக்கும் பயணங்களால் அடிக்கடி டென்சன் படபடப்பு ஏற்படும்.

மாதத் தொடக்கத்தில் பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், புதன், சனி, ராகு ஆகிய கிரகங்கள் ஒன்று கூடி சஞ்சரிக்கின்றன. இதில் இராசி நாதன் புதன் வக்ரம் பெற்று இருக்கிறது. எனவே, இம்மாதம் முழுவதும் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது தான் நல்லது. விழிப்புணர்ச்சி இல்லையேல் விரயங்களையும் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். அதேநேரத்தில் 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியும் வலிமை இழக்கிறார். 8 க்கு அதிபதி வலிமை இழந்தால் அது யோகம் தான்.

கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கிணங்க புதிய திட்டங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் அதிகரிக்கும். அதிக முதலீடு செய்து தொழிலை விரிவு படுத்த அரசு வழிச் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கிடைக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் சிறப்பாக இருந்தாலும் மன நிம்மதி இருக்காது.

# நீங்கள் தீட்டிய திட்டங்கள் நிறைவேறும் புதிய பொறுப்புக்களும் வந்துசேரும்

என்ன இருந்தாலும் 9 க்கு அதிபதியான சனி வலிமை இழக்கும் இந்த நேரத்தில் தந்தை வழி சகாயங்கள் குறையும். பெற்றோர் வழியில் மனக்கசப்புத் தரும் தகவல் வந்து சேரலாம். எனவே, சனியைத் திருப்திப்படுத்த விஷ்ணு வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். அஷ்ட லட்சுமி கவசம் பாடி வழிபட்டால் கவலைகள் நீங்கும். காரிய வெற்றி கிடைக்கும். புதன் கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பெருமாளுக்கு உகந்த பச்சைப்பட்டு அணிவித்து செந்தாமரை மலர் சூடி கற்கண்டு பொங்கல் நெய்வேத்தியம் வைத்து அனைவருக்கும் வழங்குவது நல்லது.

சுக்ரன் பலம் உங்களுக்கு இம்மாதத் தொடக்கத்தில் கை கொடுக்கிறது. மாதத்தில் முதல் 13 நாட்கள் 12 க்கு அதிபதி சுக்ரன் 6 இல் சஞ்சரித்து தன் வீட்டைத் தானே பார்க்கிறார். எனவே, ஆடை, ஆபரண சேர்க்கையும் அணிகலன்கள் வாங்கும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு உருவாகும்.

**புதனின் வக்ர இயக்கம்!**

ஒக்டோபர் 25 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகங்கள் வக்ரம் பெற்று சஞ்சரிக்கும் பொழுது யோகங்களே வந்து சேரும். எனவே, துணிவும் தன்னம்பிக்கையும் கொண்டு செயலாற்றுங்கள். தொல்லைகள் எல்லையை விட்டு விலகும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகிறன்றன.

**தனுசு சக்ரனின் சஞ்சாரம்!**


உங்கள் இராசிக்கு 5,12 க்கு அதிபதியான சுக்ரன் ஒக்டோபர் 31 ஆம் திகதி தனுசு இராசியில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். எனவே, வெளிநாட்டு அனுகூலம் உண்டு. விரும்பும் விதத்தில் காரியங்களில் வெற்றி காண நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பச் சுமை கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். சுக்ரன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் வெளிநாட்டுப் பயணத்திற்கான ஏற்பாடுகள் வெற்றிகரமாக அமையும். முன்னோர் வழிச் சொத்துக்களினால் ஏற்பட்ட பாகப்பிரிவினைகளில் இருந்த பெண்களின் குறுக்கீடு சுமூகமாக முடியும்.

**துலாம் புதனின் சஞ்சாரம்!**

இராசிநாதன் வக்ர இயக்கம் முடிந்து பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பலவித நன்மைகளை உங்களுக்கு வழங்கும். கரைந்த கையிருப்புகளை உங்களுக்கு சேமிக்கும் வாய்ப்பு உருவாகும். சுப நிகழ்ச்சிகளில் இருந்த தடைகளும் தாமதங்களும் விலகி இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வழிபிறக்கும். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்போடு மகிழ்ச்சிக்குரிய வாழ்க்கையை அமைத்துக்கொள்வீர்கள்.

இம்மாதம் பெருமாள் வழிபாடு உங்களுக்கு பெருமையை சேர்க்கும். சஷ்டி அன்று சண்முகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**பூனர்பூசம் 4 ஆம் பாதங்கள், பூசம், ஆயில்யம்**

**சாதனையாளராகத் திகழ வேண்டுமென்று விரும்பும் கடக இராசிநேயர்களே!**

**மனக்கசப்புகள் மாறும்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்திலேயே சந்திர பலம் நன்றாக இருக்கிறது. விபரீத ராஜயோக அடிப்படையில் குரு சஞ்சரிக்கிறார். செவ்வாய் 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து தன் வீட்டைத் தானே பார்ப்பதால் பூமி யோகம் முதல் பொருளாதார விருத்தி வரை அடுக்கடுக்காக நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதத்தில் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். குறிப்பாக தனாதிபதி நீச்சம் பெற்றிருக்கிறாரே என்று கவலைப்பட வேண்டாம். குரு தனாதிபதியைப் பார்ப்பதால் நீச்ச விலை மாறி நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் விதத்தில் பண வரவு வந்த கொண்டே இருக்கும். எந்தச் செயலை நீங்கள் செய்ய நினைத்தாலும் தனத்தை வைத்துக் கொண்டு ஒரு சில காரியங்களைச் செய்ய இயலாது.

# பூமியோகம் முதல், பொருளாதார விருத்திவரை அடுக்கடுக்காக நடைபெற்றுக்கொண்டே இருக்கும்

தொழில் தொடங்க வேண்டும், இடம் வாங்க வேண்டும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க வேண்டும். பெற்றோர்களின் கல்யாணக்கனவுகளை நனவாக்க வேண்டும். பெற்றோர்களின் மணி விழாவை சிறப்பாக நடத்திப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் நீங்கள் நினைத்திருப்பீர்கள். அந்த எண்ணங்களைச் செயலாக்கப் போதுமான பணம் இல்லையே என்றும் கவலைப் பட்டிருக்கலாம்.

இந்த மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது எதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்ளோ அந்தச் செயலை செய்வதற்கான முயற்சிகளை எடுக்கும் பொழுதே நான் உங்களுக்கு உதவி செய்கிறேன் என்று நண்பர்கள் வலிய வந்து கூறுவர். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் வீட்டு முன்னேற்றம் கருதியும் ஒத்துழைப்புச் செய்வர். அரசு வழிச் சலுகைகளில் இருந்து தாமதங்கள் அகலும்.

அர்த்தாஷ்டம சனி கொஞ்சம் வலிமை இழந்திருக்கும் நேரமிது. இந்த நேரத்தில் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு நீங்கள் சென்று அன்னதானம், வஸ்திர ஸ்தானம் போன்றவற்றை செய்து வழிபட்டு வந்தால் எண்ணங்கள் நிறைவேறும். காக வாகனத்தானை கைகூப்பித் தொழவேண்டிய நேரமிது. என்ன இருந்தாலும் தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. ஏதேனும் நோய்க்கான அறிகுறிகள் தெரிந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. மாற்று மருத்துவம் ஒரு சிலருக்கு கை கொடுக்கும்.

**புதனின் வக்ர இயக்கம்!**

ஒக்டோபர் 25 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இது ஒருவழிக்கு நன்மைதான். விரயாதிபதி வக்ரம் பெறுவதால் விரயங்கள் குறைவாகவே இருக்கும். சேமிப்பு உயரும். செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வாய்க்கும். சகோதர வர்க்கத்தினரால் சிறு இடையூறுகள் ஏற்பட்டாலும் மூன்றாம் நபரின் தலையீட்டால் அது விலகும்.

**சுக்ர பெயர்ச்சிப் பலன்கள்!**

ஒக்டோபர் 31 ஆம் திகதி தனுசு இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 4,11 க்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் பொழுது தாய்வழி உறவில் விரிசல் ஏற்படலாம். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அவர்கள் மறுப்புச் சொல்லி மன நிம்மதியைக் குறைக்கலாம். வாகன மாற்றம் செய்ய முன்வரும் நேரமிது. பழைய வாகனங்களின் பழுதுச் செலவுகளை முன்னிட்டு இனி புதிய வாகனங்களை வாங்குவோம் என்று முடிவெடுப்பீர்கள்.

**துலாம் இராசியில் புதனின் சஞ்சாரம்!**

புதன் வக்ர இயக்கம் நீங்கி துலாம் இராசியில் இப்பொழுது சஞ்சரிக்கப்போகிறார். அந்த நிகழ்வு நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இதை முன்னிட்டுக் குடும்பச் செலவு கூடும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி ஆடம்பரப் பொருட்களையும் வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். பொதுவாக இது போன்ற காலங்களில் புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். இம்மாதம் அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும். சஷ்டியன்று சண்முகநாதப் பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா முழு ஆதரவை வழங்கும்

## சீனாவின் வர்த்தக அமைச்சர் யூ ஜியன்குவ தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் தமது நாடு முழு ஆதரவை வழங்கும் என சீன வர்த்தக அமைச்சின் சர்வதேச வர்த்தக விவ காரங்களுக்கான பிரதியமைச்சர் யூ ஜியன்குவ தெரிவித்துள்ளார்.**

சீன வர்த்தக அமைச்சின் சர்வதேச வர்த்தக விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் யூ ஜியன்குவ தலைமையிலான சீனப் பிரதிநிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் சீனாவின் பங்களிப்பு குறித்து இருதரப்பினரும் ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை பாராட்டிய சீன அமைச்சர், இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தமது நாடு முழு ஆதரவை வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகள் பல, பத்தாண்டுகளாக பேணப்பட்டு வருவதாக குறிப்பிட்ட சீன அமைச்சர், குறிப்பாக 1952ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் - அரிசி உடன்படிக்கையை சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், இலங்கையுடன் இன்று வரை செய்யப்பட்ட உடன்படிக்கைகளில் தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என சீன அமைச்சர் யூ ஜியன்குவ மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, நாட்டில் வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்பற்ற பெண்கள் பல்வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையை உருவாக்க வேண்டிய அவசியம் குறித்தும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச சீன அமைச்சருடன் விரிவாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதை ஊக்குவிக்கும் வகையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பில் குறிப்பிட்ட அமைச்சர் பசில் ராஜபக்ச, எதிர்வரும் மாதங்களில் பெருமளவிலான சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவார்கள் எனவும் நம்பிக்கை வெளியிட்டு ள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கையின் தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் அனுரா சிறிவர்த்தனே, சீனாவுக்கான இலங்கை தூதுவர் றஞ்சித் உயன்கொட, சீனாவின் ஆசிய விவகாரங்களுக்கான திணைக்களத்தின் வர்த்தக ஆலோசகர் வாங் லிப்பிங் மற்றும் இத்திணைக்களத்தின் பிரதி இயக்குநர் குவாங் சாங்பெங் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கையின் ஆடை மற்றும் கைத்தறி தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கு உதவுவதன் மூலம் இலங்கையின் வறுமை நிலையைக் குறைக்கும் என இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# முஸ்லிம்- பௌத்த நல்லுறவை வளர்த்தெடுக்க இணையத்தளம்

## ஜனாதிபதியின் வழிகாட்டலில்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கையின் கீழ் 54 முஸ்லிம் நாடுகள் உட்பட சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்தும் வகையில் முஸ்லிம் - பௌத்த நல்லுறவு மற்றும் இலங்கையில் இனங்களுக்கிடையே ஐக்கியம் சம்பந்தமான இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

கடந்த மாதம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் தீர்மானத்தின் படி முஸ்லிம் - பௌத்த ஐக்கிய நல்லுறவு அமைப்பின் தலைவரும் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் வேந்தருமான பேராசிரியர் கும்புருகமுவே வஜிர தேரர் தலைமையில் உயர்மட்டக் கூட்டமொன்று கொழும்பில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் மத்திய கிழக்கு நாடுகள் சம்பந்தமான ஆலோசகர் அப்துல் காதர் மசூர் மௌலானாவை, ஜனாதிபதி இந்த இணையத்தளத்தினை அரபு மற்றும் ஆங்கில மொழிகளில் வழங்குவதற்கு உதவுமாறு பணித்ததன் பேரில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டம் பற்றி கருத்து தெரிவித்த பேராசிரியர் கும்புருகமுவே வஜிர தேரர்,

இலங்கையில் பண்நெடுங்காலமாக பௌத்த - முஸ்லிம்களுக்கிடையே நல்லுறவு இருந்து வருகின்றது. கடந்த 30 வருட கால யுத்தத்தின் பின்னர் எமது நாட்டில் சில அதி தீவிர போக்குடைய பௌத்த குழுக்கள் முஸ்லிம்களிடையே இன நல்லுறவை சீர்குலைத்து வருகின்றன. இவ்வாறான சீர்குலைவுகளை முற்றுப்புள்ளி வைக்குமுகமாக கிராம மட்டத்தில் இருந்து பௌத்த முஸ்லிம் நல்லுறவை மேலும் கட்டியெழுப்புவதே எனது பணியாகும். அதற்காகவே நான் பாடுபட்டு வருகின்றேன் என்றார். (அ-2)

# அமைச்சர்களுக்காக வருடாந்தம் 350 கோடி ரூபா செலவாகின்றது

இந்நாட்டு அமைச்சரவைக்காக வருடம் ஒன்றிற்கு 350 கோடி செலவிடப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எவ்வாறாயினும் அமைச்சர்கள் அநேக காலங்களில் தமது பிரதேசங்களில் இருப்பதில்லை எனவும் அவர்களுக்காக பெருந்தொகையான பணம் செலவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர்களது எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் மகாவலி திட்டம் போன்ற இரண்டு திட்டங்களை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# காணாமற்போனோர் தொடர்பில் எமக்கு நியாயம் கிடைக்க வேண்டும்

## மன்னார் ஆயர் வலியுறுத்து

போரின் இறுதி எட்டு மாதங்களில் காணாமற் போனதாக கூறப்படும் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும் என்று மன்னார் மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்று இந்த கோரிக்கை குறித்த செய்தியை பிரசுரித்துள்ளது. அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வுகளை முன் வைக்க வேண்டும்.

நான் வன்முறைகளை எதிர்க்கின்றேன். விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வன்முறைகளையும் நான் கண்டித்திருக்கின்றேன்.



விடுதலைப் புலிகள் பொதுமக்களை கொலை செய்தமையையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம், தமிழர்களைத் தண்டிக்கும் வகையிலும் அவர்களைத் தோல்வியடையச் செய்யும் வகையிலும், தமிழ் பிரதேசங்களின் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்கின்றது என்றும் ஆயர் குற்றம் சுமத்தியுள்ளார்.

போரின் போதும் அரச பயங்கரவாதம் மற்றும் தமிழர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்களில் அரசாங்கம் ஈடுபட்டிருந்தது.

அரசாங்கத்தில் உள்ள சிலர் ஒரே மக்கள் ஒரே நாடு என்று கூறுகிறார்கள், இதில் ஒரே நாடு என்பதை ஏற்றுக்கொள்ள முடியும்.

ஆனால் தமிழர்கள் தனியான இனம், தனியான கலாசாரத்தை கொண்டவர்கள், அவர்களின் அரசியல் அபிலாசைகள் வேறானவை என்று மன்னார் ஆயர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இவ்வாண்டின் ஒன்பது மாதங்களில் ஆயிரத்து 714 பேர் விபத்தால் பலி

(கொழும்பு)

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் இறுதிவரையிலான ஒன்பது மாத காலப்பகுதியில் 25ஆயிரத்து 200 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்விபத்துக்களால் ஆயிரத்து 714 பேர் உயிரிழந்துள்ளதுடன் 13 ஆயிரத்து 478 பேர் காயமடைந்துள்ளனர்.

ஒன்பதாயிரத்து 129 பேர் சிறுசிறு காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை வாகன விபத்துக்களால் நாளொன்றுக்கு 6 தொடக்கம் 10 வரையிலானோர் உயிரிழக்கின்றனர். மது போதையில் வாகனம் செலுத்துதல், போட்டித்தன்மை, நித்திரைக்கலக்கத்தில் வாகனம் செலுத்தல் மற்றும் பாதசாரிகளின் கவனயீனம் போன்ற காரணங்களாலும் இவ்வாறான வாகன விபத்துக்கள் அதிகரிப்பதாகவும் இவ்விதம் அதிகரிக்கும் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு சாரதிகளும் குறிப்பாக பாதசாரிகளும் அவதானமாக செயற்படவேண்டுமெனவும் பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர். (அ-2)

# மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டும்

## பிரதமர் ஜயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என பிரதமர் டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மாகாணசபையை நடத்துவதற்கு பெரும் தொகை பணம் செலவாகின்றது. ஆனால் இதன் மூலம் எதிர்ப்பார்க்கும் பலன் எதையும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை

மாகாண சபைக்காக செலவிடும் பணததில் மக்கள் நலன் தொடர்பிலான விடயங்களை மேற்கொள்ள முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கும் அரசு பெருந்தொகையான பணத்தை செலவிடுகிறது, அதேபோல் தேர்தலில் கள மிறங்கும் வேட்பாளர்களும் பெருந்தொகையில் பணத்தை செலவிடுவதாகவும் பிரதமர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருது பெறுவதற்கு இரு நூலகங்கள் தெரிவு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள கிளிநொச்சி பொது நூலகம், வட்டக்கச்சி பொது நூலகம் ஆகியன தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்விதம் விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நூலகங்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு 7 இல் அமைந்துள்ள தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. (ம-269)

## மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு

கிளி.சிவநகர் கிராம மூத்தோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப.2.30 மணியளவில் கிளி.சிவநகர் அ.த.க. பாடசாலையில் நடை பெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டப் பணிப்பாளர் ந.மோகனபவன், கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவவிருந்தினர்களாக கிளிநொச்சி பொதுவைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் டாக்டர் மா.ஜெயராஜா, உலக தரிசன திட்டப் பணிப்பாளர் கீர்த்பால் தாசார், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன் , கரைச்சி பிரதேச செயலக மூத்த பிரஜைகள் நலன் பேணும் அலுவலர் செல்வி காந்திமதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிவநகர் மூத்த பிரஜைகள் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து மூத்த பிரஜைகளையும் விருந்தினர்கள் மற்றும் பொது மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு சங்கத்தின் தலைவர் அ.இரகுபதி அறிவித்துள்ளார். (ம-254)

## வவுனியாவில் நடமாடும் சேவை



(பூந்தோட்டம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வவுனியா நகரசபையினால் நடமாடும் சேவையொன்று இன்று திங்கட்கிழமை கோவில்புதுக்குளத்தில் இடம்பெறவுள்ளதாக வவுனியா நகரசபையின் செயலாளர் கே. சத்தியசீலன் தெரிவித்தார்.

காலை 9 மணிக்கு கோவில் புதுக்குளம் சிறுவர் பூங்காவில் ஆரம்பமாகும் நடமாடும் சேவையில் ஆதன பெயர் மாற்றம் செய்தல், காணி பிரிவிடுகைக்கான விண்ணப்பங்கள் ஏற்றல், கட்டட விண்ணப்பங்கள் ஏற்றல், ஆதனவரி செலுத்துதல், வியாபார உரிமம் வழங்குதல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்குதல். முச்சக்கரவண்டி உரிமம் வழங்குதல், நூலக அங்கத்துவம் வழங்கல் சேவைகள் இடம்பெறவுள்ளதுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பல் மருத்துவ சேவை, தொற்றா நோய் சிகிச்சை, காசநோய் சிகிச்சை, வளர்ப்பு நாய்களுக்கான விசர் நாய்த் தடுப்பூசி ஏற்றல் போன்ற சேவைகளும் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-266)

## செயலமர்வு

வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச செயலமர்வுகளை வவுனியா வடக்கு கல்வி வலயமும் ஸ்மயில் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

மாணவர்களின் பெறுபேற்றின் அளவை அதிகரிக்கும் முகமாக செயற்படுத்தப்படும் இச் செயலமர்வில் விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களுக்கான செயலமர்வுகள் இடம் பெற்று வருகின்றன.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 10 செயலமர்வு நிலையங்களில் இடம்பெற்று வரும் இச் செயலமர்வுகளை புலம்பெயர்ந்தோர் அமைப்பான ஸ்மயில் (புன்னகை) அமைப்பு வவுனியா வடக்கு கல்வி வலயத்துடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது. (ம-266)

## வவு.வில் விவசாயிகள் தினம் அனுஷ்டிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவின் சமூக ஆர்வலர்கள் இணைந்து விவசாயிகள் தினத்தை கள்ளிக்குளம் கிராமத்தில் நேற்று அனுஷ்டித்தனர்.

விவசாயிகள் தினத்திற்காக சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்ட சமூக ஆர்வலர்கள் மீள்குடியேற்றப்பட்ட கிராமமான கள்ளிக்குளத்தில் விவசாயத்தில் ஈடுபடும் மக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் அவர்களுக்கு தேவையான உதவிகளையும் வழங்கியிருந்தனர்.

இதேவேளை மிகவும் வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவு பொதிகளை விநியோகம் செய்திருந்த இக் குழுவினர் அவர்களின் காணிகளில் பயன்தரு மரங்களை நாட்டியதுடன் பல்வேறு உதவிகளையும் வழங்கியிருந்தனர்.

இந் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் க. உதயராசா, வரியிறுப்பாளர் சங்க தலைவர் செ. சந்திரகுமார், கலைஞர் மாணிக்கம் ஜெகன், சமுர்த்தி உத்தியோகத்தர்களான கனிசியஸ், கோ. சிவநேசன் உட்பட வவுனியா பாடசாலை சாரணர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ம-266)





# வவுனியா பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினத்தினை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு.

**அபிநய பாடல் குழு 1**

விபுலானந்தாக்கல்லூரி

**அபிநய பாடல் (தனி )**

கெ. பிறேமி (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம), க. தனுகரன் (திருஞானசம்பந்தர் வித்தியாலயம்), கி. கிருஸ்ரிகா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

**பேச்சு போட்டி- பிரிவு 2**

த. துசிதா (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), த. பிரதீஸ் (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), ர. மதுமிதன் (விபுலானந்தாக் கல்லூரி)

**பேச்சுப்போட்டி- பிரிவு 3**

இ.கிறிஸ்டினா (தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), க. பிரிந்தன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), சி.மிதுர்சன் (வவுனியா இந்துக்கல்லூரி), இ. பவதாரணி (வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை)


**நாடகப்போட்டி**

வவுனியா கல்மடு மகாவித்தியாலயம், தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம், தர்மபுரம் சரஸ்வதி வித்தியாலயம்

இப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் எதிர்வரும் 26 ஆம் திகதி வவுனியா பூவரசன்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள பிரதேச சிறுவர் முதியோர் மற்றும் மாற்று வலுவுடையோர் தினத்தில் வழங்கப்படவுள்ளதுடன் முதலாமிடம் பெற்ற நிகழ்வுகள் அன்றையதினம் மேடையேற்றப்படவும் உள்ளன என வவுனியா பிரதேச செயலாளர் க. உதயராசா தெரிவித்தார்.

இதேவேளை முதலாமிடம் பெற்ற **விடியல்** எனும் நாடகம் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-266)

## கால்நடைகள் திருட்டு அதிகரிப்பு



(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேசத்தில் கால்நடைகள் திருட்டு போவதாக கால்நடை வளர்ப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

தமக்கு பொருளாதாரத்தை ஈட்டித்தரும் கால்நடைகளை இறைச்சிக்காக சிலர் திருடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதிகளவில் பசு மாடுகள் இவ்வாறு திருட்டு போவதால் பால் வியாபாரத்தை நம்பி வாழும் பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாவும் தெரிவிக்கப்படுவதுடன் பூந்தோட்டம், இறம்பைக்குளம், தாண்டிக்குளம், பத்தினியார் மகிழங்குளம் போன்ற பிரதேசங்களிலேயே அதிகளவான கால்நடைகள் காணாமற் போவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி மாடுகளை திருடிச் செல்வோரை கண்டுபிடித்து தகுந்த தண்டனை வழங்க வேண்டும் எனவும் கால் நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (ம-266)





இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளராக பதவி உயர்வு பெற்ற எஸ். பிரேம்குமார் இலங்கை வங்கியின் வவுனியா நகர கிளைக்கு வருகை தந்த போது....... (படம் :- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியை பிரதம வேட்பாளராக அறிவித்ததால் மதவாத செயற்பாடுகள் தலையெடுத்துள்ளன

## திருமாவளவன் குற்றச்சாட்டு



**(சிதம்பரம்)**

**பாரதிய ஜனதா கட்சியின் பிரதம வேட்பாளராக நரேந்திர மோடி அறிவிக்கப்பட்ட பின்னர் இந்தியா முழுவதும் மதவாத செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இவற்றைத் தடுக்கும் வகையில் மதவாதத்துக்கு எதிரான இடது சாரிகள் உள்ளிட்ட கட்சிகள் இணைந்து மத சார்பற்ற கூட்டணி அமைத்து மத வாதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.**

சிதம்பரம் பாராளுமன்றம் தொகுதியில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு நேற்று காலை விடுதலை சிறுத்தைக் கட்சியின் தலைவர் சிதம்பரம் வந்தார்.

அப்போது அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அவர் கூறியதாவது:

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிப்பது தொடர் கதையாகி வருகிறது. இது தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிப்பதாகவுள்ளது. இந்திய அரசு தீவிர முயற்சி எடுத்து இதற்கு நிலையான முற்று புள்ளி வைக்க வேண்டும்.

அப்படி இல்லையெனில் தமிழக மீனவர்களின் நலன் குறித்து ஒரு உறுதியான நிலைபாட்டை எடுக்க வேண்டிய பொறுப்பும், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் தமிழக அரசுக்கு உள்ளது என்பதை கவனத்தில் கொண்டு இதற்கு நிரந்தர தீர்வை தமிழக அரசு எடுக்க வேண்டும.

ஈழத்தமிழர்கள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கு தமிழக அரசு சிறப்பு நிதி ஒதுக்கி அங்கு வைத்தியசாலை, கல்வி நிலையங்கள், வீடுகள் போன்ற மேம்பாட்டு பணிகளுக்கு தமிழக அரசு உட்படுத்த வேண்டும்.

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமரோ, அவரின் சார்பில் உறுப்பினர்களோ பங்கேற்க கூடாது என வலியுறுத்தி பிரதமரை நேரில் சந்தித்து மனு கையளிக்கவுள்ளோம்.


அதனையும் மீறி இந்திய அரசு கலந்து கொள்ளுமாயின் பாராளுமன்ற தேர்தலில் காங்கிரசுக்கு பின்னடைவு ஏற்படும்.

பாரதீய ஜனதாவின் பிரதம வேட்பாளராக மோடி என அறிவிக்கப்பட்ட பின்னர் இந்தியா முழுவதும் மதவாத செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதனைத் தடுக்கும் வகையில் மதவாதத்துக்கு எதிரான இடது சாரிகள் உள்ளிட்ட கட்சிகள் ஓரணியில் சேர்ந்து மத சார்பற்ற கூட்டணி அமைத்து மதவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் மண்ணுரிமை கோரிக்கையை வலியுறுத்தி மண்ணுரிமை வாரம் தமிழகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படவுள்ளது. (2)

# பாக்.போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் வேதனையளிக்கிறது

## சல்மான் குர்ஷித் கண்டனம்



போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் இராணுவம் அடிக்கடி மீறுவதை இந்தியா முக்கிய பிரச்சினையாக கருதுவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் ஜம்மு மற்றும் சம்பா மாவட்டங்களையொட்டிய எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கியால் சுட்டதில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் இருவர் பலத்த காயம் அடைந்தனர்.

இந் நிலையில், டில்லியில் கடந்த சனிக்கிழமை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பாகிஸ்தான் இராணுவத்தின் இந்த அத்து மீறிய செயலுக்கு கண்டனம் தெரிவித்தார்.

நாட்டின் குடிமக்களின் பாதுகாப்பு, இறையாண்மையைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. அந்த வகையில், எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் அடிக்கடி அத்துமீறி நடந்து கொள்வதை இந்தியா முக்கிய பிரச்சினையாக கருதுகிறது. இதற்கு தீர்வு காண்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் எத்தகைய சூழல் நிலவுகிறது என்பதை இரு நாட்டு இராணுவத்தினரும் நன்கு அறிவர்.

எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தின் அடாவடி செயலுக்கு இந்திய இராணுவம் தக்க பதிலடி கொடுக்கிறது. உயிரைத் துச்சமாக நினைத்து, துணிச்சலாகச் செயற்படும் இராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்படும் எத்தகைய அசாதாரண சூழலையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு, நாட்டைப் பாதுகாக்க இந்திய இராணுவம் தயார் நிலையிலுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு விவகாரத்தில் சமரசம் என்பதற்கு சிறிதும் இடமில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவகாரத்துக்கு அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. இதனால், இரு நாடுகளின் இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் விரைவில் நடைபெற ஏற்பாடு செய்யப்படும். அத்துடன் இந்தப் பிரச்சினைக்கு மத்திய அரசு மிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்றார்.

**பாகிஸ்தான் தூதர்**

இதேவேளை இந்த தாக்குதல்கள் குறித்து இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் சல்மான் பஷீர் கூறுகையில், எல்லையில் அமைதி நிலவ தேவையான அனைத்து நடவடிக்கையும் பாகிஸ்தான் எடுத்து வருகிறது. இது இரு நாட்டு பிரதமர்களின் சந்திப்பின் போதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் எல்லையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழ்நிலை விரைவில் சீரடையும என்றும் கூறினார். (2)

# ஒபாமாவை நவாஸ் சந்திப்பார்

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப் நாளை மறுதினம் புதன்கிழமை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் வெள்ளை மாளிகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அப்போது இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான பிரச்சினைகள் குறித்து ஒபாமா விரிவாக பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


ஆனால், இந்தமுறை, பாகிஸ்தானை ஒபாமா கண்டிப்பார் பயங்கரவாதத்துக்கு துணை போக வேண்டாம் என்று மிகுந்த கண்டிப்புடன் கூறுவார் என்றும் எதிர்பார்ப்பு உள்ளது. (2)



**லண்டன் பக்கிங்ஹாம் மாளிகையில் இடம்பெற்ற கல்வி தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பாகிஸ்தான் சிறுமி மலாலா கலந்து கொண்டார். இதன் போது பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தை அவர் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.**

# இத்தாலிய முன்னாள் பிரதமருக்கு அரசியலில் ஈடுபட தடைவிதிப்பு

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு



(மிலன்)

வருமான வரி செலுத்தாமல் மோசடியில் ஈடுபட்டு வந்த இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோணிக்கு (வயது 75) இரண்டு ஆண்டு காலம் அரசியலில் ஈடுபட மிலன் நீதிமன்றம் தடை விதித்தது.

பெர்லஸ்கோனி கோடீஸ்வரர். தொழில் அதிபரான இவர் அரசுக்கு வரி செலுத்தாது மோசடி செய்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, அவர் மீது மிலன் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கின் விசாரணை நடந்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் பெர்லஸ்கோனி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர் 2 ஆண்டுகள் அரசியலில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவர் பாராளுமன்றத்தில் 'செனட்' உறுப்பினர் பதவியை இழக்கிறார். மேலும் இந்த தடை காலத்தில் அவர் தேர்தலில் போட்டியிட முடியாது. நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து பெர்லஸ்கோனிக்கு அரசியல் தடை அல்லது வீட்டு சிறை தண்டனை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, இந்த தடை உத்தரவை எதிர்த்து அவர் உயர்நீதிமன்றில் மேல்முறையீடு செய்கிறார். இந்தத் தகவலை அவரது சட்டத்தரணி தெரிவித்தார். அதன்போது இந்த தடை உத்தரவை ஒரு வருடமாக குறைக்கும்படி வலியுறுத்தவிருப்பதாக கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்சாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது. – ஜேம்ஸ் க்ளார்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒல்லாந்தரின் கோட்டை வரலாறு என்றால் மாவீரர் துயிலும் இல்லங்களும் வரலாறுதான்

பகைமையை காட்டுவதிலிருந்து சிலவற்றை நீக்க வேண்டியது மனுதர்மம். எனினும் சமகாலத்து மானிடத்திடம் மனுதர்மத்திற்கு இடமில்லை.

மனுதர்மம் இருக்குமாயின் நோயாளிகள், மரணித்தவர்கள், சமயத் தலைவர்கள், சிறுவர்கள், பள்ளி மாணவர்கள், பெண்கள், முதியவர்கள் என்போரிடம் இனப்பாகுபாடு காட்டப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்டவர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும். அதிலும் குறிப்பாக இறந்தவர்களின் உடலங்கள் அவர்களின் நினைவுத்தலங்கள் தொடர்பில் சிதைப்புக்கும் வதைப்புக்கும் இடமில்லை. இது மரியாதை செலுத்தப்பட வேண்டிய இடம்.

பாகிஸ்தானும் இந்தியாவும் எத்துணை பகைமை கொண்டிருந்தாலும் அன்னை இந்திரா காந்தி இறந்தவுடன்; ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து, இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக, இந்தியாவுக்கு விரைந்து சென்றார் பாகிஸ்தான் நாட்டு அதிபர் என்பதை இங்கு ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

மரணத்தில் பகைமை காட்டுவது மகா கொடுமைத் தனம். அதே போல் இறந்தவர்களின் நினைவுத் தலங்களும் மரியாதைக்குரியவை.

இந்த உண்மையை உணர்ந்ததன் காரணமாகவே தன்னோடு போரிட்டு உயிர்நீத்த எல்லாள மன்னனுக்கு மரியாதை செய்ய வேண்டும் என மன்னன் துட்டகைமுனு கட்டளையிட்டான்.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்வது படைவீரர், புலிவீரர் என்பதெல்லாம் இறப்பிற்குப் பின் பாகுபாட்டுக்குரியவை அல்ல.

நினைவுத்தலங்கள் என்பன போரில் உயிர் இழந்தவர்கள் அல்லது உயிர் நீத்தவர்கள் துயில் கொள்ளும் நினைவிடங்களாகவே கருதப்பட வேண்டும். எனினும் துரதிர்ஷ்டவசமாக மாவீரர் துயிலும் இல்லங்கள் குறித்து அரசு எதிர்வினையான நிலைப்பைக் கொண்டுள்ளது.

இதன் காரணமாகவே இது தொடர்பில் முரண்பட்ட நிலைமைகளும் அதுபற்றிப் பேசும் போதெல்லாம் கடுப்பேறல்களும் ஏற்படுகின்றன.

இத்தகைய நிலைமைகள் மாறவேண்டும். போரில் உயிரிழந்த படைவீரர்களுக்கு ஆனையிறவில் நிலனவுத்தூபி இருந்தால், அதேபோரில் உயிரிழந்த போராளிகளுக்கும் அதனருகில் நினைவாலயம் கட்டப்படவேண்டும் என்ற மன உணர்வு இந்த நாட்டில் எப்போது ஏற்படுகிறதோ! அப்போது தான் இலங்கை எல்லா இனங்களுக்கும் சொந்தமான நாடாக – அமைதிப்பூங்காவாக மாறமுடியும்.

ஒருகாலத்தில் அன்னியர் ஆட்சியை எதிர்த்து இந்த நாட்டின் சிங்கள மன்னர்கள் போரிட்டனர். அப்படியானால் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டையை மீள் திருத்தம் செய்து அதனை பாதுகாக்க இலங்கை அரசு முயற்சிப்பது எதற்காக?

மாவீரர் துயிலும் இல்லங்கள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று பகைமை கொண்ட நீங்கள், இந்த நாட்டை கைப்பற்றி ஆட்சி செய்த ஒல்லாந்தர்கள் மீது வெறுப்புக் கொள்ளாதது ஏன்?

அன்னியர்களான ஒல்லாந்தர்களின் கோட்டை இருப்பது உங்களுக்கு வரலாறு என்றால், முப்பது ஆண்டு காலம் போராட்டம் நடந்த இந்த மண்ணில்; மாவீரர்களின் துயிலும் இல்லங்கள் வரலாறில்லையா?

எதற்கெடுத்தாலும் தமிழர்களை எதிர்க்கும் நீங்கள், இறந்து போன மாவீரர்களின் இல்லங்களை அழிக்க வேண்டும் என்று அடம் பிடியாதீர்கள். அது ஊழ்வினையாகி உங்களை உருக்குலைக்கும் கவனம்.

# இந்திய மீனவர்கள் விவகாரம் அவசர கூட்டத்திற்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி ஊடுருவும் இந்திய மீனவர்கள் விவகாரம் தொடர்பிலான பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் முகமாக, இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து யாழ்ப்பாணத்தில் அவசர கூட்டம் ஒன்றை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இப்பிரச்சினை தொடர்பில் முதற்கட்டமாக இடம்பெறும் கூட்டத்தை கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் நடத்தும்படி அவர் பணித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தனது அமைச்சுக்கான பதவிகளை ஜனாதிபதியின் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரே, அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது வடமாகாண முதலமைச்சரையும் கலந்து கொள்ளுமாறு குறிப்பிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அழைப்பு அனுப்புவதையும் உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும் ராஜித சேனாரத்னவிடம் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் வடமாகாண கடலோரக் கிராமங்களின் அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தூக்குத்தண்டனை கிடைத்தாலும் மகிந்தவிடம் மன்னிப்புக் கேட்கமாட்டேன்

## மங்கள சமரவீர முழக்கம்

சிறைக்குச் சென்றாலும் அல்லது தூக்கு தண்டனை பெற்றாலும் மஹிந்த ராஜபக்ஷவிடம் மன்னிப்புக் கேட்கமாட்டேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நான் மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் அவ்வாறே மன்னிப்புக் கேட்க மாட்டார் என அவர் குறிப்பிட்டார்.

மாத்தறை பிரதேசத்தில் இடம் பெற்ற மோதலில் பாதிக்கப்பட்ட மேல் மாகாணசபை உறுப்பினர் கிரிஷாந்த புஸ்பகுமாரவை நலன் விசாரிக்க மங்கள சமரவீர நேற்று சென்றுள்ளார்.

இதன்போது ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் சேவை ராஜபக்ஷ குடும்ப தேவைகளுக்கான சேவையாக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த மங்கள சமரவீர, நாட்டின் நீதி நாயின் நிலைக்கு மாறிவிட்டதாக குறிப்பிட்டார்.

மாத்தறை மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 45 பேர் வரையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஐவருக்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட ஹர்மன் குணதிலக்க எனும் தீவிரவாதியை பொலிஸார் உபசரித்தமை குறித்த காணொளி ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும் மங்கள கூறினார்.

மாத்தறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அல்லது சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (எ-11)

## ஊரெழுவில் பயிர் சிகிச்சை முகாம்

விவசாயம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்குடன் பயிர்ச் சிகிச்சை முகாம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் கமநல சேவை பகுதியைச் சேர்ந்த ஊரெழுவில் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் பயிர்ச் செய்கையின் போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய நிபுணர்கள்வருகைதரவுள்ளனர். எனவே விவசாயிகள் பயிர்ச் செய்கை தொடர்பான பிரச்சினைகளை நேரடியாக தெரிவித்து தீர்வைப் பெற்றுக் கொள்ளமுடியம். (அ-9)

# யாழ்.மாவட்ட பொலிஸார் இலஞ்சம் வாங்குவது குறைவு

## இப்படி கூறுகிறார் அத்தியட்சகர் ஜெப்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விடவும் யாழ். மாவட்டத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இலஞ்சம் பெறுவது குறைவு என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

பொலிஸார் இலஞ்சம் பெறுவதைத் தடுக்கும் விதமாக யாழ்.மாவட்டத்தில் விஷேட நடைமுறைகள் உள்ளன எனவும் அத்தியட்சகர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாங்குளத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பொதுமக்களிடமிருந்து இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பில் அவரிடம் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு எமது பொலிஸ் பிரிவிற்குள் உள்ளடக்கப்படாத மாவட்டமாகும். ஆகையால் அம்மாவட்டம் தொடர்பில் நான் கருத்துக் கூற முடியாது.

எனினும் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விடவும் இங்கு பொலிஸார் இலஞ்சம் பெறுவது மிகக் குறைவாகும்.

இதற்கு காரணம் இங்குள்ள விஷேட நடைமுறையாகும். மேலும் பொலிஸார் ஒருவர் பொது மக்களிடம் பணத்தை இலஞ்சமாக பெறின் அது தொடர்பில் என்னிடம் முறையிட்டால் இலஞ்சம் பெற்ற பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார். (அ-4)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குடும்பம் அமைதி பெற



இணக்கத்தை வற்புறுத்தும்போதும் பிணக்கத்தைத் தீர்க்கும்போதும் இன்சொல்லையே உள்ளமும் உதடும் உபயோகப்படுத்தவேண்டும். இன்சொல்லினால் கெடுதல் ஒழிய நன்மைகள் பல பெறலாம்.

குடும்ப அமைதியைப் பெற சலனமில்லாததும் விசாலமானதுமான மனம்வேண்டும். எதையும் தாங்கும் இதயம் என்பார்களே அது இங்கேதான்வேண்டும். பொறுமை, சகிப்புத் தன்மை இவை எல்லையின்றித் தேவையாகும். எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டுவிடலாம்.

பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமையும் பொறுத்தலும் மறத்தம் அமைதிக்கு வழிகளாகும். அதேபோல் பிறர்கூறும் கடுஞ்சொற்களையும் அவை சொல்லப்படாதது போல் பாவித்து ஒதுக்கிவிட வேண்டும். அப்போது தான் அமைதி பிழைக்கும்.

தற்போது அம்மா- மகளுக்கிடையே கூடப் பிணக்குகள் தோன்றுவதையும் வளர்வதையும் பார்க்கிறோம். அவர்களுக்கிடையேகூட விட்டுக்கொடுத்தல் (Adjustment) இல்லையானால் வேறு யாரிடமும் அதைத்தேடுவது? அம்மாவுக்குப் பெண்ணாக இருக்கும் போதே இப்படி என்றால் பின்னால் வாழ்க்கை எப்படி அமையும்? அப்புறம் யார் மேல் குற்றம் சொல்வது?

தன் கருத்துச் சரியேயாயினும் உயர்வேயாயினும் வாழ்க்கைத்துணை ஒத்துக்கொள்ளவில்லையென்றால் அது எவ்வளவு அவசியமான கருத்தானாலும் ஞானமேயானாலும் சிறிது காலத்திற்கு அவர்கள் ஒத்துக்கொள்ளும்வரை தள்ளிவைக்க வேண்டியதுதான். குடும்ப அமைதியை இழந்து பெறுவது ஞானமேயாயினும் அதனால் ஒரு பயனும் வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த இராஜதந்திரத்துடன் செயற்படுங்கள்

## எமிலியாம்பிள்ளை வடக்கு மீன்பிடி அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறலைத் தடுப்பதற்கு இராஜ தந்திர ரீதியில் செயற்படுமாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து மற்றும் வர்த்தகம் வாணிபம் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக எமிலியாம்பிள்ளை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய மீனவர்களை எம்மவர்கள் எதிரிகளாக பார்க்கக்கூடாது எனும் தலைப்பில் வெளியாகிய செய்தி தொடர்பாக எம்து கடும் அதிருப்தியையும் ஆட்சேபனையையும் யாழ். மாவட்ட மீனவர்கள் சார்பாக பகிரங்கமாக தெரிவித்துக்கொள்கின்றோம். குறித்த செய்தியில் நாங்கள் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினரை சந்தித்த போது, இந்திய மீனவர்கள் கடல் எல்லை தெரியாமலே எமது கடற் பிரதேசத்திற்குள் வருகின்றார்களே தவிர அவர்கள் எமது வளங்களை அழிப்பதற்காக வரவில்லை எனக் குறிப்பிட்டுள்ளமையானது உண்மைக்கு புறம்பானது.

தாங்கள் குறித்த விடயம் தொடர்பாக கருத்து கூறுவதற்கு முன் கடற்றொழில் சமூக தலைவர்களிடமும் அங்கத்தவர்களிடமும் கலந்தாலோசித்து இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தால் ஆரோக்கியமானதாகவும் பயனுள்ளதாகவும் அமைந்திருக்கும்.

இந்திய மீனவர்கள் திசை தெரியாமல் இலங்கை கடற்பரப்பிற்குள் வருவதாக கூறியிருந்தீர்கள். ஆனால் இந்திய எல்லைக்கு அப்பால் 20,30 கிலோமீற்றர் தாண்டி வட மாகாண கரையோரங்களுக்கு அண்மையில் அதாவது வன்னி நிலப்பரப்பிற்கு அண்மித்த கடற்பிரதேசம் பாலைதீவு, காரைநகர், மாதகல் மற்றும் வடமராட்சி கரையோரங்களை அண்மித்த பிரதேசங்களில் இந்திய மீனவர்கள் நாளாந்தம் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய மீனவர்கள் எமது கடற்பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்து இழுவைப்படகை பயன்படுத்தி மீன்பிடிப்பதன் மூலம் எமது அப்பாவி மீனவர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் நாளாந்தம் அழிக்கப்படுவதுடன் எமது கடல் வளமும் அழிக்கப்பட்டு வருவதையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.


தொடர்ந்து இந்திய மீனவர்கள் இழுவைப் படகின் மூலம் எமது கடல் பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுவார்களானால் எமது கடல் வளம் பூரணமாக அழிக்கப்பட்டு முப்பதாயிரம் மீனவக்குடும்பங்கள் வெகுவிரைவில் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டி வரும் என்பதையும் தங்களுக்கு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து ஆயிரக்கணக்கான எமது மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தின் முன் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து எமது அரசாங்கம் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

எனவே எதிர்காலத்தில் எமது மீனவ குடும்பங்களின் நலனில் அதிக அக்கறை காட்டி மீனவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வலுவூட்டும் வகையில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை தடுப்பதற்கு இராஜ தந்திர ரீதியில் செயற்படும் படி தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக இருநாட்டு மீனவர்களும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் அதனைத் தடுப்பதற்கு இரு நாடுகளும் முன்வராத காரணத்தால் தேவையற்ற உயிரிழப்புக்களும் மோதல்களும் கைது நடவடிக்கைகளும் சொத்தழிவுகளும் இடம்பெற்று வருகின்றன.

அதிகாரத்தில் உள்ளவர்கள் பாதிக்கப்படும் மீனவர்களின் நலனில் அக்கறை காட்டாது மௌனமாக இருந்து வரும் நிலையில் மீனவர்களின் எதிர்ப்பு போராட்டங்கள் இரு நாடுகளிலும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-6)



திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகள் நடுகைசெய்யும் 5 ஆம் கட்டம் தீவகம் தெற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற போது...

## காணாமற் போனோர் தொடர்பில் முல்லையில் 450 விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பதிவு நடவடிக்கையில் இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் சுமார் 450 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் நடவடிக்கை வடக்கில் யாழ்ப்பாணத்தில் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமானது. இந்த நடவடிக்கை வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நேற்று வரை இடம்பெற்று வந்தது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களில் மட்டும் சுமார் 450 விண்ணப்பங்களை காணாமற் போனவர்களின் உறவினர்கள் சமர்ப்பித்துள்ளனர். இதேவேளை நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட மல்லாவி பகுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பதிவு நடவடிக்கையில் சுமார் 50 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் மழையையும் பொருட்படுத்தாது காணாமற் போனவர்களின் உறவினர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வந்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 2009 மே 19 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

மேற்படி ஆணைக்குழு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு காணாமற் போனவர்கள் தொடர்பான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஊடகங்கள் ஊடாக அறிவித்துள்ளது.

ஆகவே மேற்படி விடயம் தொடர்பாக மக்களின் நலன் கருதி ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக்கின்ற வடமாகாண காணாமற்போன உறவுகளின் குடும்பங்களின் சங்கம் பெயர்களைப் பதிவு செய்து, ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்கு அனுப்பும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கு மன்னார் பிரஜைகள் குழு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கிவருகிறது.

வடமாகாணம் காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் தலைமைச் செயகைம் மன்னார் பிரஜைகள் குழுவில் இயங்கிவருகிறது.

இதன்படி பின்வரும் இடங்களில் குறிப்பிடப்பட்ட திகதியில் காணாமற்போனவர்களின் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கையினை வடக்கில் கடந்த 6 நாட்களாக மேற்கொண்டு வந்தது.

அதன்படி யாழ்.மாவட்டத்தில் சுமார் 800 விண்ணப்பங்களும் கிளிநொச்சியில் 550 விண்ணப்பங்களும் முல்லைத்தீவில் 450 விண்ணப்பங்களும் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சுமார் 350 விண்ணப்பங்களும் காணாமற் போயுள்ளவர்களின் உறவினர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## அபிவிருத்தி சபையின் நிர்வாகத் தெரிவு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் முள்ளியான், மருதங்கேணி ஆகிய வைத்தியசாலைகளின் அபிவிருத்தி சபையின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று காலை மருதங்கேணி வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக மருதங்கேணி பொறுப்பு வைத்திய அதிகாரி கனகரட்ணம், உபதலைவராக வி.தவச்செல்வம், செயலாளர் எஸ். சிவதாஸ், உபசெயலாளாராக என்.நெடுஞ்செழியன், பொருளாளராக எஸ். சிவரூபன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்கள் 4 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் முள்ளியான் வைத்திய அதிகாரி உமாபதி சிவம், மருதங் கேணி வைத்திய அதிகாரி கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-64)

## நட்பு ரீதியிலான கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது

(யாழ்ப்பாணம்)

யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் கிளி/மகாவித்தியாலய அணிக்குமிடையிலான நட்பு ரீதியான கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 13 வயதின் கீழ்ப்பிரிவு "ஏ" அணியும் கிளி/மகாவித்தியாலயத்தின்13 வயதின் கீழ்ப் பிரிவு அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தனது முதல் தொடரில் 51 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 152 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் மனோறியன் -43, அபினாஸ்-39, செந்துரன்-14,டினுசான்-12 என்ற ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் கிளி/மகாவித்தியாலயம் சார்பாக யதுசன், யசிக்குமார், தானுசன், லவன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கீர்த்திகன் ஒரு இலக்கினையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்கு தனது முதலாவது தொடரில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கிளி/மகாவித்தியாலய அணி ஆட்ட நேரமுடிவின்போது 38 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 87 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் கீர்த்திகன் 23 ஓட்டங்களையும் யதுசன், தஜிகன், தானுசன் ஆகியோர் முறையே 15,13,11 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யா/சென்.ஜோன்ஸ் அணி சார்பாக அபினாஸ் 3 இலக்குகளையும் டினுசான் 2 இலக்குகளையும் பிரசாந் ஒரு இலக்கினையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியில் எவ்வித மாற்றமும் இல்லை -பிசிசிஐ

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மீதமுள்ள ஒருநாள் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலியா 2-1 என முன்னிலை வகிக்கிறது.

மீதமுள்ள நான்கு போட்டிகள் ராஞ்சி(ஒக்டோபர் 23), கட்டாக்(ஒக்டோபர் 26), நாக்பூர்(ஒக்டோபர் 30) மற்றும் பெங்களூரு(நவம்பர் 2) மைதானங்களில் நடக்கிறது.

இப்போட்டிகளில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப் பட்டனர். இதில் மொகாலியில் நடந்த மூன்றாவது போட்டியில் ஒரே ஓவரில் 30 ஓட்டங்கள் வழங்கி, தோல்விக்கு வித்திட்ட வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மாவுக்கு இடம் கிடைக்காது என எதிர்பார்க்கப்பட்டது.

அதாவது மொகாலியில் நேற்றுமுன்தினம் நடந்த 3-வது ஒருநாள் போட்டியில் இந்திய அணியின் தோல்விக்கு இஷாந்த் சர்மாவே காரணம். அவர் வீசிய 48-வது ஓவரில் 30 ஓட்டங்களை கொடுத்தார். இதனால் அவர் இந்திய அணியில் இருந்து நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதுவரை நடந்த 3 ஆட்டத்திலும் இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சு குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு இல்லை. 24 ஓவர்கள் வீசி 189 ஓட்டங்களை விட்டுக் கொடுத்துள்ளார். 2 விக்கெட் தான் கைப்பற்றி உள்ளார்.

50 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட் கைப்பற்றியதுதான் சிறந்த பந்துவீச்சாக உள்ளது.

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராக திகழும் இஷாந்த் சர்மா இப்படி மோசமாக வீசுவது இளம் வீரர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆனால் முதல் மூன்று போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட அதே வீரர்கள், மீதமுள்ள நான்கு போட்டியிலும் விளையாடுவார்கள் என பி.சி.சி.ஐ தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

**அணி விவரம்:** தோனி(அணித் தலைவர்), ஷிகர் தவான், ரோகித் சர்மா, விராத் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ரவிந்திர ஜடேஜா, அஷ்வின், புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, வினய் குமார், அமித் மிஸ்ரா, அம்பதி ராயுடு, முகமட் ஷமி, ஜெயதேவ் உனத்கத்.

# இலங்கை அணியின் பயிற்சியாளர் சப்பல்!



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக அவுஸ்திரேலிய அணி முன்னாள் அணித் தலைவர் கிரேக் சப்பல் (வயது 65) நியமிக்கப்பட உள்ளார்.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஷேன் டப் மற்றும் மைக்கேல் ஓ சல்லிவன், இந்தியாவின் வெங்கடேஷ் பிரசாத், லால்சந்த் ராஜ்புத், மோகித் சோனி ஆகியோரது பெயர்களும் பரிசீலிக்கப்பட்ட நிலையில், சப்பலை தேர்வு செய்ய இலங்கை கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரது பயிற்சியின் கீழ் 2007 உலக கோப்பை போட்டியில் களமிறங்கிய இந்திய அணி படுதோல்வி அடைந்தது.

மேலும், அணித் தலைவர் கங்குலிக்கும் பயிற்சியாளர் சப்பலுக்கும் இடையே நடந்த பனிப்போரும் பெரும் சர்ச்சைக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

இந்த மாத இறுதிக்குள் சப்பல் நியமனம் குறித்த இறுதி முடிவு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மினிபஸ்-ஆட்டோ விபத்து சாரதி தப்பியோட்டம்

## சுற்றுலாப் பயணிகள் பொலிஸ் நிலையத்தில்

(மிருசுவில்)

சுற்றுலா மினி பஸ் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 6.30 மணியளவில் ஏ9 வீதி மிருசுவில் சந்திக்கு அண்மையில் இடம்பெற்று ள்ளது.

தென் பகுதியைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளுடன் யாழில் இருந்து தெற்கு நோக்கி பயணித்துக் கொண் டிருந்த மினி பஸ்சும் யாழ் நோக்கிவந்து கொண்டிருந்த முச்சக்கர வண்டியுமே எதிரெதிரே மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளன.

குறித்த மினிபஸ் முன்னே சென்று கொண்டிருந்த வொறொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிரே வந்த ஆட்டோவுடன் மோதி கவிழ்ந்துள்ளது.

இதில் யாழ்ப்பாணம் கலம்பகம் சென் மேரிஸ் லேனைச் சேர்ந்த அன்ரனி விமல தாஸ் (வயது 44) என்ற ஆட்டோ சாரதியே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளரர்.

மினி பஸ் சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பியோடியுள்ளார். சம்பவ இடத்திற்கு வந்த கொடிகாமம் பொலிஸார் விபத்துக்குள்ளான மினி பஸ்ஸையும் அதிலிருந்த சுற்றுலாப் பயணிக்ளையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (எ-8,85)

# இஷாந்த் மீது தோனி பாய்ச்சல்

இஷாந்த் சர்மாவின் மோசமான பந்து வீச்சால் இந்திய அணி அவுஸ்திரேலியாவிடம் 3-வது ஒருநாள் போட்டியில் தோல்வி அடைந்தது. முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 303 ஓட்டங்கள் குவித்தது.


அணித்தலைவர் தோனி 121 பந்தில் 12 பவுண்டரி, 5 சிக்சருடன் 139 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பின்னர் விளையாடிய அவுஸ்திரேலியா 3 பந்து எஞ்சியிருந்த நிலையில் 6 விக்கெட் இழப்புக்கு 304 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பால்க்னரின் அதிரடியான ஆட்டம் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு காரணமாக இருந்தது. அவர் 29 பந்தில் 2 பவுண்டரி, 6 சிக்சருடன் 64 ரன் எடுத்தார். வோகஸ் 85 பந்தில் 76 ரன் எடுத்தார். அஸ்திரேலியாவின் இந்த வெற்றியால் தோனி அதிரடி சதம் வீணானது.

ஆட்டத்தின் 48-வது ஓவரே இந்தியாவின் தோல்விக்கு காரணமாக அமைந்தது. இஷாந்த் சர்மா வீசிய அந்த ஓவர்தான் திருப்பு முனையாக மாறிவிட்டது.

47-வது ஓவர் முடிவில் இந்தியாவின் பக்கம் வெற்றிக்கு இருந்தது. 18 பந்தில் 44 ஓட்டங்கள் தேவை என்ற கடினமான நிலை இருந்தது. 48 ஓவரை வீசிய இஷாந்த் சர்மா ஓட்டங்களை வாரிக் கொடுத்தார். அவரது



மோசமான பந்துவீச்சால் 30 ஓட்டங்கள் அந்த ஓவரில் கொடுக்கப்பட்டது. அந்த ஓவரில் பால்க்னர் 4 சிக்சரும் ஒரு பவுண்டரியும் 2 ரன்னும் (4, 6, 6, 2, 6, 6) எடுத்தார்.

இந்த தோல்வியால் மோசமாக பந்து வீசிய பந்துவீச்சாளர்கள் மீது கப்டன் தோனி கடுமையாகச் சாடியுள்ளார். அவர் இஷாந்த் சர்மாவை மறைமுகமாக தாக்கியுள்ளார். இது குறித்து தோனி கூறியதாவது,

கடைசி சில ஓவர்கள் மிகுந்த ஏமாற்றம் அளித்தது. இறுதிக் கட்ட ஓவரில் ஓட்டங்களை விட்டு கொடுப்பது எப்போதுமே கவலையானது.

சர்வதேச போட்டிகளில் விளையாடும் போது பந்துவீச்சாளர்கள் தங்களுக்கு என்று ஒரு திட்டம் வியூகம் அமைத்து இருக்க வேண்டும். எல்லா விஷயத்தையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

வாயில் கரண்டியை வைத்து ஊட்டி எதுவும் சொல்லத் தேவையில்லை.

நடு ஓவரில் ரவீந்திர ஜடேஜா நன்றாக வீசினார். மேலும் பகுதிநேரப் பந்துவீச்சாளர்கள் தான் தேவை.

48-வது ஓவரை வீச இஷாந்த் சர்மாவை அழைத்த எனது முடிவு சரியானதே. ஏனென்றால் வினய் குமாரும் வீசி வருகிறார். அவரும் ஓட்டங்களை கொடுக்கத்தான் செய்தார். மாற்றம் ஏற்படும் என்று கருதி இஷாந்த் சர்மாவை 48 ஓவரில் வீச அழைத்தேன். மறுமுனையில் வினய்குமார் வீசினார். ஆனால் வினய் குமார் 10 முதல் 12 ஓட்டங்கள் வரை தான் கொடுத்தார்.

கிரிக்கெட்டைப் பொறுத்தவரை எதுவும் நடக்கலாம். சரியான முடிவை எடுக்க முயற்சிக்கும்போது சில சமயம் பலன் கிடைக்கும், சில சமயம் பலன் அளிக்காமல் போய்விடும்.

வீரர்களின்தேர்வு குறித்த எனது கவலையை தேர்வாளர்களிடம் தெரிவிப்பேன். நன்றாக வீசக் கூடிய எந்த பந்துவீச்சாளர் ஒரு சில ஓவர்கள் ஆட்டத்தின் தன்மையை மாற்றி விடும்.

நாங்கள் ஒரு கட்டத்தில் 76 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை இழந்து விட்டோம். இதனால் 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்தது அதிர்ஷ்டமே. இவ்வாறு டோனி கூறியுள்ளார்.

இந்த வெற்றி மூலம் 7 போட்டிக் கொண்ட தொடரில் அவுஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரு அணிகள் மோதும் 4-வது ஆட்டம் நாளை மறுதினம் ராஞ்சியில் நடக்கிறது.

# முழுமையான அரச சேவைக்குள் உப தபாலதிபர்கள் உள்வாங்கப்படுவர்

## தபால் மா அதிபர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

உப தபாலதிபர்களை விரைவில் அரச சேவைக்குள் முழுமையாக உள்ளீர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் ரோஹன அபயவர்த்தன தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வட மாகாண அஞ்சல் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அஞ்சல் திணைக்களம் என்பது அரச துறையில் பழமை வாய்ந்த ஒரு திணைக்களமாகும்.

அதன் செயற்பாடுகள் தற்போது போதுமானதாக இல்லை.

நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வருகையினால் தபால் திணைக்களத்தின் செயற்பாடுகள மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன.

இவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பில் திறைசேரியுடன் நாம் ஆலோசித்து வருகிறோம்.

உப தபாலதிபர்கள் தற்போது முழுமையான அரச சேவைக்குள் உள்வாங்கப்படவில்லை. இதனால் அவர்கள் பல சலுகைகளைப் பெறமுடியாதவர்களாக காணப்படுகின்றனர்.

இந்நிலையில் அவர்கள் விரைவாக முழுமையான அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்டு ஏனைய அரச ஊழியர்கள் பெறும் சகல சலுகைகளையும் பெற்றுக் கொள்ள நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எமது திணைக்களம் அடுத்த வருடத்திலிருந்து 10 பாரவூர்திகளைக் கொள்வனவு செய்து அதனூடாக மாவட்ட ரீதியான பொதிகள் சேவைகளை மேற்கொள்ளவுள்ளது. இதனால் வர்த்தகர்கள் பயனடையக் கூடியதாக இருக்கும்.இதற்கான அனுமதியை திறைசேரி வழங்கியுள்ளது.

தற்போது தபால் திணைக்கள உயர்மட்ட அதிகாரிகள். நீண்ட காலம் பழமைவாய்ந்த வாகனங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இவர்களுக்கு அடுத்த வருடம் நவீன வசதிகள் கொண்ட வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

இவ் உலக அஞ்சல் தின நிழ்வில் அஞ்சல் கட்டுப்பாட்டு அதிகாரி குமரகுரு, வட மாகாண பிரதி தபால் மா அதிபர் என். இரட்ணசிங்கம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர், வட மாகாணத்தைச் சேர்ந்த அஞ்சல் அத்தியட்சகர்கள், இராணுவ அதிகாரி மற்றும் அஞ்சல் சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவோரை தங்க வைப்பதற்கு விடுதிகளை பதிகிறது இந்தியா

(கொழும்பு)

கொழும்பில் அடுத்த மாதம் நடக்கவுள்ள பொதுநலவாய உச்சி மாநாடடில் பங்கேற்கும் குழுவினர் தங்குவதற்காக, இந்தியா விடுதி அறைகளைப்பதிவு செய்துள்ளதாக, வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில இந்தயா அறைகளைப்பதிவுசெய்துளள போதிலும், இந்தியக் குழுவின் முழு விபரம் தொடர்பாக தெளிவாகத் தெரியவரவில்லை என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், தாம் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ள போதிலும், இந்தியப் பிரதமர மன்மோகன் சிங், இந்தியக் குழுவுக்குத் தலைமை தாங்குவாரா என்று இனமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தியக்குழுவுக்கு துணை குடியரசுத் தலைவர் ஹமீத் அன்சாரி தலைமை தாங்கலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், மன்மோகன்சிங், பொநலவாய மாநாட்டுக்கு வருவாரா இல்லையா என்று இந்தியா இன்னமும் உறுதிப்படுத்தவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

# மக்களுக்கான நிரந்தர தீர்வை மாகாணசபை பெற்றுக்கொடுக்கவேண்டும்

## சர்வதேச இந்துகுருமார் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது மக்களுக்கு விடிவையும் நிரந்தர தீர்வையும் வடக்குமாகாண சபை பெற் றுத்தர வேண்டும் என சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா வாசுதேவகுருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவிக்கையில், வடக்கில் எத்த னையோ வேலையற்ற இளைஞர்கள், பெண்ணை தலைமைத்துவ மாகக்கொண்ட குடும்பங்கள் உள்ளன.

இவ் இளைஞர்களிற்கும், குடும்பப் பெண்களுக்கும் உயர்வு கிடைக்கவும் இவ் வடக்குமாகாண சபை பெரும் பணியாற்ற வேண்டும்.

அவர்கள் எங்களுடைய மக்கள். இது எங்களுடைய கலாசாரம். ஆகவே நாம் இவற்றிலிருந்து பிரிந்து விடலாகாது. இன்று எமது மண்ணில் கலாசார சரழிவுகள் தினம்தினம் பெருகிக கொண்டே செல்கின்றன. இவையாவும நீங்கி எமது மண்தூய்மை பெறவேண்டும் என பிரார்த்திக்கின்றோம் என்றார். (எ-4)

# விளையாட்டுத் துப்பாக்கி காண்பித்து கொள்ளை அடித்தவர்கள் கைது

(கொழும்பு)

விளையாட்டுத் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி சுமார் 7 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்த நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் சகோதரர்கள் இருவரும் அடங்குகின்றனர். ஏனைய இருவரும் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர்கள் என்றும் நால்வரும் உறவினர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பலாங்கொடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடை, ராசகலை மெத்தகந்த தேயிலை தோட்டத்தில் பச்சை தேயிலை கொழுந்து பணத்தையே சந்தேக நபர்கள் நால்வரும் இவ்வாறு கொள்ளையடித்துள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் மூன்று இலட்சம் ரூபாவை மீட்டுள்ளதாகவும் அவர்களிடமிருந்து கத்தி, விளையாட்டுத் துப்பாக்கி, மோட்டார் சைக்கிள் மற்றும் கார் உளளிட்டவற்றை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-8)

# அடிதடியில் ஈடுபட்ட 30 பேர் கைதாயினர்

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரத்தில் அடிதடியில் ஈடுபட்ட 30 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

சந்திகளில் நின்று அடிதடியில் ஈடுபட்டமை, மது போதையில் அடிதடியில் ஈடுபட்டமை, குழு மோதல்கள், நண்பர்களிடையே முரண்பாடுகள் எனப்பல சந்தர்ப்பங்களில் 30 பேர் கைது செய்யபட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் நீதி மனறத்தில் ஆஜர்படுத்தப்பட்டு உரிய நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (அ-4)

# ஆஸியில் காட்டுத் தீ அவசர நிலை பிரகடனம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் பரவியுள்ள காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்பு வீரர்கள் போராடிக்கொண்டிருக்கும் சூழ் நிலையில் அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அவசரநிலை பிரகடனத்தின் மூலம் அதிகாரிகள் மக்களை வீடுகளை விட்டு வெளியேற்ற முடியும். தேவைப்பட்டால் மின்சார விநியோகத்தை துண்டிக்கவும் முடியும்.

அங்கு வெப்பக் காலநிலை மீண்டும் தொடரும் என்றும் கடுமையான காற்று வீசும் என்றும் வானிலை முன்னறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

அதனால் அடுத்துவரும் நாட்களிலும் காட்டுத் தீ வேகமாக பரவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 40 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மோசமான இந்தக் காட்டுத் தீயில் 200க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. தீ இன்னும் கட்டுப்படுத்த முடியாமல் பரவிக் கொண்டே இருக்கிறது.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இம்முறை பருவகாலத்துக்கு முன்னரே காட்டுத் தீ ஏற்பட்டுள்ளமை பருவநிலை மாற்றங்கள் தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளது. (எ-11)

## கொழும்பு குடியிருப்பா...

இந்த படிவங்கள் வீடுவீடாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இது பொதுநலவாய மாநாட்டுக்கான பாதுகாப்பு ஏற்பாடா அல்லது சிறுபான்மையினரைக் குறிவைக்கும் குண்டர்களின்வேலையா என்று தெரியாமல் கொட்டாஞ்சேனை வாசிகள் குழப்பமடைந்துள்ளனர்.

இதுகுறித்து கொட்டாஞ்சேனை பொலிஸாரிடம் முறையிட்டும், அவர்கள் அதுகுறித்து அலட்சியமாக இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனினும், அரச புலனாய்வுச் சேவைகள் பொதுமக்களிடம் தகவல திரட்டுவதற்கு முன்னர், பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிப்பது வழககம என்று கொட்டாஞ்சேனை பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி ஒவிற்றிகம தெரிவித்துள்ளார். (எ-11)

## மக்களுக்...

தகவல்களைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகவும் சிந்தாத்துரை கூறினார்.

இதுவரையில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்களிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டிருப்பதாகவும் மொத்தமாக மூவாயிரம் பேர் பற்றிய தகவல்கள் கிடைக் கலாம் என்றும் சிந்தாத்துரை குறிப்பிட்டார். (எ-8)


# தேவை

லண்டனில் 72 வயதான ஆரோக்கியமான ஒருவரைக் கவனிப்பதற்கு ஒருவர் தேவை. பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத தாதி விரும்பத்தக்கது

முழு விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்தில் விண்ணப்பிக்கவும்

தவம் - 68 Burges Road, London E6 2BH England

(4186)

# வீடு வாடகைக்கு உண்டு

A-9 கண்டி வீதி, சாவகச்சேரியில் 5 அறை 3 கோல் சமையல் அறை, மலசலகூடம், நல்ல தண்ணீர், மற்றும் தரிப்பிட வசதியுடன் நல்ல சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.

தற்போதுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகில்

தொடர்பு: 021 490 6364

மா.செல்வரத்தினம்,
அன்னையில்லம், குமரகோட்டம், கோண்டாவில்.

(C-5234)


## மொழிக் கொள்கையை...

களுக்கு நாம் சென்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ்நிலையங்களில்தமிழ்மொழி முன்னிலைப் படுத்தப் படுவதில்லை என்று பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் தமிழ் பொலிஸ உத்தியோகஸ்தர்கள் போதுமானவர்களை கடமையில் அமர்த்த வில்லை என்பதே. பொலிஸ் நிலையங்களில் மொழிக் கொள்கை அமுல்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் ஊடாக சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்படும்.

ஏனைய அரச திணைக்களங்களிலும் நடைபெறும் இவ்வாறான செயப்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விடயங்கள் தொடர்பாக எமது ஆணைக்குழுவின் ஊடாக தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொளளபபடும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

## சீரற்ற கால...

ளது என்றும் நிலையம் அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 164 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காலியில்பெய்தகடு மழையினாலே ஒருவர்மரணமடைந்துள்ளதாகநிலையம்அறிவித்துள்ளது. (எ-8)

## பொது...

என்பது குறித்து இவ்வூடகம் தகவல் எதுவும வெளியிடவில்லை.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும்என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ள நிலையில், இத்தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## மாதம்...

னால் என்ன வெடித்துள்ளதென்று இதுவரையிலும் கண்டறியப்படவில்லை என்று தெரிவித்த மாதம்பே பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஆட்லெறிக்கு பயன்படுத்தப்பட்ட ரவையே வெடித்து சிதறியிருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் பயன்படுத்தப்பட்ட ஆட்லெறிக்கான ரவைகள் சிலவற்றை அந்த இடத்திலிருந்து மீட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (எ-8)


# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*

*பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்*

யார் AF இல் French படிக்க முடியும்?

திருமணம் மூலம் வெளிநாடு (France, Canada...) செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் & French கற்கவிரும்புவோர். இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்களும் படிக்கிறார்கள்.



- Speaking, writing, listening & reading திறமைகளில் தேர்ச்சிபெற..
- 6 மாத கற்கைநெறியின் (100 HOURS) முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டுகிறது. பின் தரமான CERTIFICATE ஐ பெறுங்கள்.
- 6 மாதத்தினை பூர்த்திசெய்யாதோர் கடிதம் ஒன்றை பெறலாம்.
- International Exams : DELF (A1,A2), களுக்கு யுகு இல் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. மேலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும்.

*குறிப்பு: நீங்கள் French கற்கும்*

- ✓ *நிறுவனம் France அரசாங்கம் மற்றும் French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்டதா?*
- ✓ *நிறுவனத்தின் Exams, Certificates என்பன உண்மையில் பெறுமதியானதா? என்பவற்றைக் தெரிந்துகொள்வதால் உங்கள் பணத்தையும் நேரத்தையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.*
- ✓ எமது தலைமை நிறுவனம் Paris இலும் கிளைநிறுவனங்கள் இலங்கையில் COLOMBO, GALLE, KANDY, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. யாழில் French Embassy யின் அனுசரனையுடன் 1976 இல் இருந்து... உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Françaises உள்ளன. (French Embassy website: www.ambafrance-lk.org).

புதிய வகுப்புகள் விரைவில் (சனி & ஞாயிறு)... இன்றே பதிவுசெய்யுங்கள்...

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 நேரில் வரலாம்

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

# FRENCH LANGUAGE CENTRE

CENTRE FOR FRENCH

# FRENCH CLASSES

France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(8-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.

735 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்.. வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே International French Diploma Exam இல் சித்தி....

ஆரம்பம் : 09.11.13 Sat at 8am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).

11.09.13 Mon at 4.30pm. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)

0779 789 456

Deutsch,IELTS,B1,Sinhala Classes உம் நடைபெறுகிறது...

# Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம் (C-5226)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 021 2224040 / 0772 930061


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org